விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srılanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 07 செவ்வாய்க்கிழமை (20.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153




# கூட்டுறவுடன் செயற்படக் கூடிய இரு அரசு இலங்கையில் தேவை

## அவுஸ். சட்டமா அதிபர் வலியுறுத்தல்

(வேல்ஸ்)

இலங்கைக்கு இரு அரசுகள் எனும் தேவையுள்ளது. அந்த இரு அரசுகளும் கூட்டுறவுடன் வாழ்வதற்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும் என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என சர்வதேச ஜூரிமார் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் அவுஸ்திரேலிய மாநில சட்டமன்ற அதிபருமான நீதியரசர் ஜோன் டவுட் வலியுறுத்தியுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியதில் இளைஞன் ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று மாலை இராசாவின்தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த கண்டி வீதி அரியாலையைச் சேர்ந்த ஜெயக்குமார் ஜெயதீஸ் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 8க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

படையினரின் நிலைகள் மீது ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலிலேயே படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 8க்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## கிழக்கு மாகாண சபை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஹிஸ்புல்லா இணக்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படப் போவதில்லை என மிரட்டி வந்த ஹிஸ்புல்லா அரசாங்கத்துடன் இணைந்து மாகாண சபையில் சுகாதார அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்க தற்போது இணங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் நாளை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருப்பதாகவும் கூறப்படுகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஹிஸ்புல்லாவை அலரி மாளிகையில் சந்தித்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு கோரியுள்ளார்.

இதற்கமைய அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாலம்பிட்டி படையினரின் பூரண கட்டுப்பாட்டிலாம்

(மன்னார்)

மன்னாரிலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாலம்பிட்டிப் பகுதியை விடுதலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வார காலமாகப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட முயற்சி வெற்றியடைந்துள்ளதாகவும் கைப்பற்றப்பட்டுள்ள இப் பிரதேசத்தில் தேடுதல் நடத்திய படையினர் புலிகளின் 13 சடலங்களையும் ரி-56 ரக துப்பாக்கிகள் 11 ஐயும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (எ-5)

## வவுனியா நகரில் ஒருவர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் உணவு விடுதி ஒன்றில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. கொல்லப்பட்டவர் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேசு பாலச்சந்திரன் (வயது-38) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரி (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு பயணம்

(கொழும்பு)

இலங்கை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு பயணமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணிலின் இந்த விஜயத்தின் போது ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளையும் அதன் பின்பு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து நாட்டின் பொருளாதார நெருக்கடி (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்தை ஆதரித்து இந்திய அரசு தனது பிரச்சினைகளை அதிகரிக்காது

### இலங்கை அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

தனது நாட்டில் பல பிரச்சினைகளைக் கொண்டுள்ள இந்தியா, இலங்கையில் தனித் தமிழ் நாடு ஒன்று உருவாகுவதற்கு ஆதரவளிக்கப் போய் தனது பிரச்சினைகளை அதிகரித்துக் கொள்ளாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச ஊடகமான ஏரிக்கரை பத்திரிகையின் வாரப் பதிப்புக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் ஒரு காலத்தில் வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநராகப் பதவி வகித்த வரதராஜப்பெருமாள் போன்று பிள்ளையானும் இந்தியாவினால்தான் இயக்கப்படுகின்றாரா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்,

மாகாண சபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தத்தமது நடவடிக்கைகளைத் தாமே மேற்கொள்வர் என்று பிரதமர் தெரிவித்தார். கருணா நாடு திரும்பிய பின்னர் பிள்ளையான் தலைமையிலான குழுவுக்கும் அரசுக்கும் இடையிலான உறவில் ஏதாவது மாற்றம் ஏற்படுமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலை மாதத்திலிருந்து சீரான மின்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஜூலை மாத இறுதியிலிருந்து மின்சாரத்தினை 24 மணிநேரமும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் இரு ஜெனரேட்டர்கள் பழுதடைந்திருந்தமையால் அவை கொழும்புக்கு அனுப்பி திருத்தம் செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இத் திருத்தம் செய்யப்பட்ட இரு ஜெனரேட்டர்களும் பொருத்தப்பட்ட பின்பு யாழ்.குடாநாட்டுக்கு மின்சாரத்தைத் தடையின்றி வழங்க முடியம் எனத் தெரிவித்த யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஜூலை மாத இறுதியில் மின்வெட்டின்றி மின்சாரம் வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். (ச-5)

## நோர்வே அரசாங்கத்தின் மீது அரசுக்கு நம்பிக்கையில்லையாம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நோர்வேயின் ஏற்பாட்டு நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு நம்பிக்கையில்லை என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அண்மையில் இந்த விடயம் தொடர்பாக தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தது. அதில் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஒஸ்லோ விஜயத்தின் நோக்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சர் ராஜித சேனாரட்ன, இலங்கையின் பெரும்பாலான மக்கள் நோர்வே போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஒக்சிசன் கொடுத்ததாக குற்றஞ்சுமத்துகின்றனர் என்றார். (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மும்பை இந்தியன்ஸ் அணிக்கு தொடர்ச்சியான 6-வது வெற்றி

(ஐதராபாத்)

பிராவோவின் சகலதுறை ஆட்டத்தினால் மும்பை இந்தியன்ஸ் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது. இவ் வெற்றியின் மூலம் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி தொடர்ச்சியான 6-வது வெற்றியைப் பெற்று அரையிறுதி வாய்ப்பை பிரகாசப்படுத்தியது.



இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு ஐதராபாத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 42 வது ஆட்டத்தில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கில்கிறிஸ்ட், முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஜெயசூர்யா , டெண்டுல்கர் சிறப்பான ஆரம்பத்தை தந்தனர்.

எனினும் அப்ரிடி,ஆர்.பி.சிங்கின் பந்தில் அடுத்தடுத்து விக்கெட் வீழ்ந்த போதும் நாயர், பிராவோவின் அதிரடியான ஆட்டத்தால் மீண்ட மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நாயர் 24 பந்துகளில் (3 பவுண்டரிகள் 2சிக்ஸர்கள் உட்பட) 38 ஓட்டங்களையும் ஜெயசூர்யா 15 பந்துகளில் (6பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் உட்பட) 36 ஓட்டங்களையும் பிராவோ 17 பந்துகளில் (2 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் உட்பட ) 30 ஓட்டங்களையும் மற்றும் டெண்டுல்கர் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங் 3 விக்கெட்டுக்களையும் அப்ரிடி, வேணுகோபால் ராவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 179 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி பெர்ணாண்டோவின் வேகத்தில் ஆரம்பத்திலேயே அப்ரிடி(0), கில்கிறிஸ்ட் (13), றோகித் சர்மா (6), சாமர சில்வா (17) ஆகியோரின் விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும் பின்னர் களமிறங்கிய வேணுகோபால் ராவ்,ரவி தேஜாவும் இணைந்து அதிரடியாக ஆடி வெற்றிக்கு போராடினார்கள். எனினும் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை மாத்திரமே எடுத்து டெக்கான் சார்ஜர்ஸ் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் வேணுகோபால் ராவ் 38 பந்துகளில் (4பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் உட்பட) 57 ஓட்டங்களையும் , ரவி தேஜா 27 பந்துகளில் (2பவுண்டரிகள் 3சிக்ஸர்கள் உட்பட) 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிராவோ 3 விக்கெட்டுக்களையும் டில்கார பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக பிராவோ தெரிவர்னார். இவ் வெற்றியின் மூலம் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி, தான் ஆடிய 10 வது ஆட்டத்தில் தொடர்ச்சியான 6 வது வெற்றியை பெற்று புள்ளிகள் அடிப்படையில் 4ஆம் இடத்தில் உள்ளதுடன் அரையிறுதிக்குள் நுழையும் வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.

இதேவேளை இத்தோல்வியுடன் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி, தான் விளையாடிய11 வது போட்டியில் 9 வது தோல்வியை சந்தித்து புள்ளிகளின் அடிப்படையில் தொடர்ந்து 7 வது இடத்தில் உள்ளது.

(5)

## வீரர்களின் அறைக்குள் செல்வதற்கு ஷாருக்கானுக்கு ஐ.சி.சி தடை விதிப்பு

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளர் ஷாருக்கான்,வீரர்கள் ஓய்விடத்திற்கு அல்லது உடை மாற்றும் இடத்திற்கு செல்லக் கூடாதென ஐ.சி.சி. ஊழல் தடுப்புக் குழு தடை விதித்துள்ளது.

இம்முடிபு மிகவும் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என ஷாருக்கான் கூறியுள்ளார். தற்போது நடந்து வரும் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை ஏலத்தில் எடுத்திருப்பவர் ஷாருக்கான்.

கொல்கத்தா அணி விளையாடும் போட்டிகளின் போது எப்போதும் உடனிருந்து வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பார். அவரின் இந்த செயலுக்கு சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புக் குழு தடைவிதித்துள்ளது.

நேற்று முன்தினம் சென்னை அணிக்கு எதிராக நடந்த போட்டியில் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக வீரர்கள் தங்கியுள்ள அறைக்கு ஷாருக்கான் சென்றதாக தெரிகிறது. ஐ.சி.சி விதிகளின்படி கிரிக்கெட் வீரர்கள் தங்கியிருக்கும் அறை அல்லது ஓய்வெடுக்கும் இடத்திற்கு வேறு யாரும் செல்லக்கூடாது. இது போட்டி பிக்சிங் கிற்கு வழிவகுக்கும் என்பதால் அவ்வாறு தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனால் மீதமுள்ள போட்டிகளில் ஷாருக்கான், வீரர்களுடன் சேர்ந்து இருக்கக் கூடாது என ஐ.சி.சி ஊழல் தடுப்பு குழு தடை விதித்துள்ளது. இந்திய கிரிக்கெட் சபையும் ஐ.சி.சி விதிகளை கட்டாயம் பின்பற்றுமாறு அவருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய ஷாருக்கான், தான் இயல்பாகவே கிரிக்கெட்டில் ஆர்வத்துடன் இருப்பதாலும் எப்போதும் கிரிக்கெட் வீரர்களுடன் இருப்பதை விரும்புவதாலும் ஐ.சி.சியின் அறிவிப்பு தனக்கு ஏமாற்றம் அளிப்பதாக தெரிவித்தார்.

(5)

## அவுஸ்திரேலிய வீரர்களுக்கு இன்னும் சம்பளம் இல்லை

ஐ.பி. எல் இருபது -20 தொடரில் பங்கேற்று விளையாடிய அவுஸ்திரேலிய வீரர்களுக்கு சம்பளம் வழங்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த தகவலை அவுஸ்திரேலிய வீரர்கள் சங்கத்தின் தலைமை செயல் அதிகாரி போல் மார்ஷ் கூறியுள்ளார். தமதுகிரிக்கெற் வீரர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்கா விட்டால் ஐ.பி. எல் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போல் மார்ஷ் கூறியுள்ளார்.

ஐ.பி.எல் தொடரில்பங்கேற்ற அவுஸ்திரேலிய வீரர்ஒருவர் போட்டி ஏற்பாட்டாளர்களிடம் சம்பளம் குறித்துகேட்ட போது அது உங்களுக்கு வந்து கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

முதலில் இரண்டு வாரங்களில் சம்பளம் கிடைக்கும் என்று கூறியதாகவும் , மீண்டும் கேட்ட போது அடுத்த வாரம் கிடைக்கும் என்று கூறியதாகவும் மூன்றாவது முறை கேட்ட போது இன்னும் சில தினங்களில் கிடைக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளதாகவும் அந்த வீரர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய வீரர்களுக்கு சம்பளம் உடனடியாக கிடைக்காவிட்டால் பின்னர் நடைபெறும் போட்டிகளில் அவர்கள் பங்கேற்க இயலாது என்று போல் மார்ஷ் மேலும் தெரிவித்தார்.

(5)

## இங்.-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிவு

(லோட்ஸ்)

ஜேக்கப் ஓரமின் சிறப்பான சதத்தின் மூலம் இரண்டாவ்து இன்னிங்ஸில் நியூசிலாந்து வலுவான நிலையைப் பெற முதலாவது டெஸ்ட் சமனிலையானது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் கடந்த 15ஆம் திகதி லோட்ஸில் முதலாவது டெஸ்ட் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 277 ஓட்டங்களை எடுத்தது. இதில் மக்கலம் 99 ஓட்டங்களையும் அணித்தலைவர் விக்டோரி 48 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சயிட் பொத்தம் 4 விக்கெட்டுக்களையும் அன்டர்சன் 3, பிரோட் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 319 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தவைர் வோகன் 106 ஓட்டங்களையும் ஸ்ரோரஸ் 63, குக் 61 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் விக்டோரி 5 விக்கெட்டுக்களையும் மார்டீன், ஓரம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 42 ஓட்டங்கள் பின்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் நேற்று 5ஆம் நாள் ஆட்டநேரமுடிபில் 6 விக்கெட்டுக்களைஇழந்து 269 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வி இன்றி சமனிலையில் முடிபுற்றது. இதில் ஜேக்கப் ஓரம் 101 ஓட்டங்களையும் ஹவ் 68 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சயிட் பொத்தம் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை போட்டியின் முதல் மூன்று தினங்களில் மழை காரணமாக ஆட்டம் இடையிடையே தடைப்பட்டு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(5)

## பீட்டர்ஸனுக்கு திடீர் மவுசு



இங்கிலாந்து அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் கெவின் பீட்டர்ஸனை அதிக தொகை கொடுத்து ஒப்பந்தம் செய்ய ஐ.பி. எல் நிர்வாகம் முன்வந்துள்ளது.

இங்கிலாந்தின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான பீட்டர்ஸனை,மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்ய இந்திய நாணயப்படி ரூபா 16 கோடிக்கும் அதிகமான தொகையை கொடுக்க இந்திய கிரிக்கெற் சபை முன்வந்துள்ளது.

தற்போது ஐ.பி.எல் கிரிக்கெற்றில் தோனி ஆண்டுக்கு ரூபா 6 கோடி ஊதியம் பெறுகிறார். அதைவிட அதிகமாக கொடுக்கவும் ஐ.பி. எல் அணி உரிமையாளர்கள் தயாராக இருப்பதாக இங்கிலாந்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து வீரர்கள் அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல் போட்டியில் விளையாட அனுமதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(5)

## ஐ.பி.எல்லில் வீரர்களுக்கு ஊக்கமருந்து சோதனை

இந்திய பிரிமியர் லீக் போட்டிகளில் பங்கேற்றுள்ள வீரர்களிடம் ஊக்க மருந்து சோதனை மேற்கொள்ள உலக ஊக்க மருந்து எதிர்ப்புக் குழு இந்தியா வந்துள்ளது.

சர்வதேச கிரிக்கெற் சபையின் விதிமுறை களின் படி ஐ.பி. எல் போட்டியில்பங்கேற்றுள்ள வீரர்களிடம் ஊக்க மருந்து சோதனை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு உலக ஊக்க மருந்து எதிர்ப்புக்குழு சுவீடனில் இருந்து டில்லி வந்து ள்ளது.

அவர்கள் எந்த அணியில் யாரிடம் சோதனை மேற்கொள்வர் எனத் தெரியாது என்று ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி தெரிவித்தார்.

ஐ.பி. எல் வீரர்களிடம் ஊக்க மருந்து பரிசோதனை மேற்கொள்ள ஐ.சி.சியின் விதிமுறை காரணமாக இருந்தாலும் பாகிஸ்தான் வீரர் சொஹைப் அக்தர் இந்தியா வரும் போது தனது பையில் அதிகமான அளவில் சிரிஞ்சர்களை வைத்திருந்ததாக பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஐ.பி.எல். நிர்வாகம் அதை மறுத்து இருந்தாலும் அதன் பின்னணியிலேயே உலக ஊக்க மருந்து எதிர்புக்குழு இந்தியா வந்துள்ளதாக தெரிகிறது.

(5)

## பிராவோவுக்கு பதில் நெல்



மும்பை இந்தியன்ஸ் அணியில் முன்னணி வீரர் ட்வாயன் பிராவோவுக்கு பதிலாக தென்னாபிரிக்காவின் அன்ட்ரூ நெல் இணைக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய அணியின் சகல துறை ஆட்டக்காரரரான பிராவோ நேற்று முன்தினம் நடைபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணியுடனானபோட்டியை அடுத்து நாடு திரும்பவுள்ளார். அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காகவே அவர் நாடு திரும்புகிறார்.

இதனை அடுத்து பிராவோவின் இடை வெளியை நிரப்ப தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர் அன்ட்ரூநெல் மும்பை அணிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இங்கிலாந்து பிராந்திய போட்டிகளில் விளையாடிவரும் அன்ட்ரூநெல் அங்கிருந்து நேரடியாக இந்தியா திரும்புவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(5)

## இன்று ஒரு தகவல்

### புத்தரும் -ஒரு கொலைகாரனும்!

புத்தர் வாழ்ந்த காலத்தில் ஒரு பயங்கரமான கொலைகாரன் இருந்தான். கொலை, கொள்ளை என்று ஏகப்பட்ட பாவங்கள் செய்தவன்.

அவனுக்குத் திடீரென்று புத்தரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது. இருந்தாலும், எப்படிப் பார்ப்பது? இவனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனபடியால், நேரடியாகப் போய்ப் பார்க்க அனுமதிக்கமாட்டார்கள். என்ன செய்யலாம்? என்று யோசித்து, மதிலேறி குதித்து மடத்துக்குப் போக முடிவு செய்தான். மதிலேறிக் குதித்து உள்ளே போனான்.

அங்கு யாரும் இருக்கவில்லை. புத்தரும் வெளியே போயிருந்தார். ஒரு மாதிரியாக, அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தபோது சீடன் ஒருவரிடம் மாட்டிக் கொண்டான்.

சீடனும் எதற்காக வந்தாய்? என விசாரித்துவிட்டு சாரிபுத்ரனிடம் அழைத்துச் சென்றார். சாரிபுத்ரனுக்கோ ஒரே ஆச்சரியம்! "என்னப்பா, நீ இங்கு எதற்காக வந்தாய்?" என்று கேட்டார். "புத்தரைப் பார்க்க வேண்டும்" என்றான் இவன். "நீ எதற்காகப் புத்தரைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டார் சாரிபுத்ரன். "எனக்கு எல்லாம் வெறுத்துப் போய்விட்டது. நான் செய்த பாவங்களிலிருந்து விடுபட வேண்டும். அதற்குப் பிராயசித்தமாக சந்நியாசியாக மாற வேண்டும். மக்கள் தொண்டில் தீவிரமாக ஈடுபடவேண்டும்" என்றான். அங்கிருந்தோருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவன் ஏகப்பட்ட பாவங்கள் செய்திருக்கிறான். இவனுக்கு சந்நியாசி ஆவதற்குரிய தகுதி உண்டா? என்ற சந்தேகம் ஏற்பட்டது.

சோதிடம் மூலமாக இவன் எப்படிப்பட்டவன் என்று அறிய முற்பட்டனர். சாரிபுத்ரனால் ஜாதகம் பார்க்கப்பட்டது பழைய பிறவிகளிலிளெல்லாம் இவன் இதைவிட மோசமாக இருந்திருக்கிறான். ஒரு துளிகூட நல்லது செய்யவில்லை என்பது தெரியவந்தது.

"இப்படியும் ஒரு ஜென்மமா இவனை வெளியே துரத்துங்கள்" என்று சத்தமிட்டனர். இவனுக்கு அதைக் கேட்டதும், கோபமே வரவில்லை. மிகவும் வேதனையாக இருந்தது. புத்தரை நெருங்கக் கூட தகுதியில்லை. நான் எல்லாம் எதற்காக வாழவேண்டும்? என்று எண்ணி, மதிற்சுவருடன் தலையை மோதிக்கொண்டான். அந்த நேரத்தில், புத்தர் உள்ளே வந்து கொண்டிருந்தார். இவனைத் தடுத்து நிறுத்தினார். புத்தரைக் கண்டதும் இவனுக்கு பரவசம்... காலில் விழுந்து வணங்கினான்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தார் புத்தர். சீடர்கள் முழு விபரத்தையும் கூறினார்கள். "இவனை ஒரு வாரத்தில் தகுதியுடையவனாக ஆக்கமுடியும்" என்றார் புத்தர்.

சீடர்களுக்கோ நம்பிக்கை ஏற்படவில்லை. இவனைப் பார்த்து என்னுடன் கூடவே இரு என்றார் புத்தர். இவனுக்கோ மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு வாரத்தில் நல்ல மனிதனாகவே மாறிவிட்டான். அமைதி, அடக்கம், சாந்தம் எல்லாமே வந்துவிட்டது. சந்நியாசி ஆகும் தகுதியில் இருந்தான். சீடர்களுக்கோ ஒரே ஆச்சரியம்!.

"எப்படி இந்த அதிசயம் நடந்தது?" என்று கேட்டனர். அதற்கு புத்தர்,

"இறந்தகாலம் என்பது இறந்துபோன காலம். எதிர்காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். அதை உருவாக்க வேண்டும். தன்னுடைய பாவச் சுமையிலிருந்து... இறந்த காலத்திலிருந்து விடுபட இவன் பட்ட தவிப்பு தான் இவனுக்கு விடுதலையை தேடித் தந்திருக்கிறது" என்றார்.

நல்லவர்களை விட குற்றவாளிகள் தான் விரைவாக பக்குவ நிலையை அடையமுடியும்! தம்மை நல்லவர்களாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு விமோசனமும் பரிபக்குவமும் சுலபமாக சித்திப்பதில்லை! இதை கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

நான் ஒரு சின்னப் பையனைப் பார்த்துக் கேட்டேன். "நாம் செய்யும் பாவங்களையெல்லாம் கடவுள் மன்னிக்க வேண்டும் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?" என்றேன்.

"கடவுள் நம்முடைய பாவங்களை மன்னிக்க வேண்டும் என்றால் முதலில் நாம் பாவங்களைச் செய்ய வேண்டும்" சார். அப்பத்தானே அவரால் அதை மன்னிக்க முடியும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கோட்டைக் குண்டுவெடிப்பு விசாரணையையும் மூடிமறைக்க அரசு முயற்சி-ரணில்குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகேஸ்வரன் எம்.பி.யின் படுகொலை விசாரணையினை மூடி மறைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியினை போன்று கோட்டை குண்டு வெடிப்பு விசாரணைகளையும் மூடிமறைக்க அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களினதும் அதே வேளை பொலிஸாரினதும் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசியல் கட்சியென்ற ரீதியில் எமது கடப்பாடாகும். இதற்காக மக்கள் இயக்கத்தை ஆரம்பித்து தொடர் போராட்டங்களை நடத்த கட்சி பேதங்களை மறந்து ஓரணியில் திரள்வோம் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஒத்துழைப்பு வழங்கிய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் ஐ.தே.கட்சி உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் கடந்த சனிக்கிழமை கண்டி ரிவர்டெல் ஹோட்டலில் இடம்பெற்றபோதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெறவும் இல்லை. ஐ.தே.கட்சி தோல்வியுறவும் இல்லை. இதுதான் உண்மையாகும். ஏனென்றால் அங்கு தேர்தல் இடம்பெறவில்லை. வாக்குக் கொள்ளையே இடம்பெற்றது.

எனவே.மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் அங்கில்லை. ராஜபக்ஷ சகோதரர்களின் தேவைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர்.

எதிர்காலத்தில் அரசாங்கம் இதற்கான விளைவுகளை சந்திக்க வேண்டிவரும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை ஒற்றுமைப்படுத்தும் நோக்கிலேயே ஐ.தே.கட்சி தேர்தலில் போட்டியிட்டது. ஆனால், அரசாங்கம் இன முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படுமென அரசாங்கம் உறுதிமொழி வழங்கியிருந்தது. ஆனால், பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிழக்கில் தமிழ், முஸ்லிம் இனவாதம் தலைதூக்கியுள்ளது.பிள்ளையான் முதலமைச்சராவதற்கு சிறிதுநேரத்திற்கு முன் மட்டக்களப்பில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்விரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் தேர்தல் வன்முறைகளைத் தடுக்க பங்களிப்புச் செய்வார்கள்.

கோட்டை குண்டு வெடிப்பு சம்பந்தமாக பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால், பாதுகாப்பமைச்சின் உத்தரவுக்கு இணங்க விசாரணைகள் குற்றவியல் தடுப்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன. இவ் விசாரணைகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு ஏன் அவசரமாகத் தலையிட்டது? பொலிஸாரின் விசாரணைகளுக்கு பின்னர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரே இவ் விசாரணைகளை மேற்கொண்டிருக்கவேண்டும்.

மகேஸ்வரன் எம்.பி.யின் கொலையை மூடிமறைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளைப் போன்று குண்டு வெடிப்பு விசாரணைகளையும் மூடிமறைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. (அ-5)

# பௌத்தமத வழிபாட்டு முறைகளில் இந்துசமயத்தின் செல்வாக்கு அதிகம்

## இந்தியாவுக்கான துணைத் தூதுவர் ஹம்சா தெரிவிப்பு

(சென்னை)

பௌத்த மதவழிபாடுகளில் தென்னிந்தியாவின் பிரதான சமயமான இந்துமதத்தின் செல்வாக்கு மிக அதிகமாகவுள்ளது.உலகின் முக்கிய பௌத்த வழிபாட்டுத் தலங்களில் நான்காவது இடத்திலுள்ள தலதா மாளிகை மூன்று இந்து ஆலயங்களினால் சூழப்பட்டுள்ளது என்று தென்னிந்தியாவுக்கான இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் பி.எம். ஹம்சா தெரிவித்தார்.

தென்னிந்தியாவுக்கான இலங்கையின் துணை உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை இரவு ஆறாவது வெசாக் உற்சவ பேருரை நிகழ்வு சென்னை மெட்ரோ பொலிட்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

பிரபல பத்திரிகை ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.முத்தையாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய துணை உயர்ஸ்தானிகர் ஹம்சா மேலும் கூறியதாவது, மே மாதம் உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு மிக முக்கியமானதாகும்.அம்மாதத்தில் வரும் வெசாக் பூரணை தினத்தை பௌத்தர்கள் புனித தினமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து தென்னிந்தியாவிலுள்ள துணை உயர்ஸ்தானிகராலயம் வெசாக் உற்சவ பேருரை நிகழ்வை நடத்தி வருகின்றது.

அத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய துணை உயர்ஸ்தானிகராலயமானது கடந்த ஆண்டு முதல் இலங்கையின் பிரதான மதங்களின் முக்கிய விழாக்களை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது.

நெருங்கிய அண்டை நாடான இந்தியாவின்செல்வாக்கு எமது கலை, கலாசாரம்,மொழி, உணவு முறை, பழக்கவழக்கங்கள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் காணப்படுகின்றது. பௌத்தமதமும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

பௌத்த மதத்தின் வழிபாடுகள், ஆசாரமுறைகள், சிற்பங்கள், சிலைகள், கட்டடங்கள் என்பவற்றில் இந்தியாவில் செல்வாக்கு நிறைந்து காணப்படுவதையும், குறிப்பாக இந்து மதத்தின் தாக்கத்தையும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

புத்த பகவானின் புனித தந்தம் வைக்கப்பட்டுள்ளதும் உலகில் பௌத்தர்களின் முக்கிய வணக்கஸ் தலங்களில் ஒன்றான தலதாமாளிகையை சூழ இந்து மத தெய்வங்களான சிவன், கதிர்காமக் கந்தன், பத்தினி அம்மன் ஆலயங்கள் காணப்படுகின்றன. (அ-5)

## இராசிபலன்

20.05.2008
(வைகாசி 07. செவ்வாய்க்கிழமை)
அனுஷம் முழுவதும்
பூரணை காலை 07.55 மணிவரை
இராகுகாலம் 02.52- 04.22மணிவரை
சுபநேரம்-10.22-11.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பொருள்விரயம், எதிர்பாராத அச்சம், காரியதடங்கல், உடல்நலக்குறைவு. |
| இடபம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், போசனசுகம், முயற்சிகைகூடும். |
| மிதுனம் | மனமகிழ்ச்சி, எடுத்தகருமங்கள் நிறைவேறும், நோய்குணமடைதல், பொருள்சேர்க்கை. |
| கடகம் | புத்திரரால் கவலை, அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக்குறைவு. |
| சிங்கம் | மனச்சஞ்சலம், சுபநிகழ்வு, வாகனசுகம், முயற்சிதாமதம். |
| கன்னி | காரியதடங்கல், பணவருவாய், அன்னியர் சந்திப்பு, தேகநலன். |
| துலாம் | எடுத்தகாரியம் தாமதமாகும், மரியாதைக்குறைவு, அதிகசெலவு, திருடர்பயம். |
| விருச்சிகம் | மனக்குழப்பம் உஷ்ணநிலை, புதியமுயற்சி, போசனசுகம். |
| தனுசு | இடமாற்றம், அமைதிக்குறைவு, தொழில்சிந்தை, பணவிரயம். |
| மகரம் | முயற்சிகைகூடும், நண்பர்கள் சந்திப்பு, பொருள்சேர்க்கை, பிறர் உதவி. |
| கும்பம் | அதிக பிரயாசை, உற்சாகம், பாராட்டு, போசனசுகம். |
| மீனம் | பித்தரோகம், ஆன்றோர் சந்திப்பு, புதிய முயற்சி, பிரயாணம். |

வளவன்




கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற "நகைச்சுவை தோரணம்" நூல் வெளியீட்டு விழாவில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரட்ணத்திடமிருந்து கொக்கையம்பதி மு.வை.செ.பாலசுப்பிரமணியம் நூலைப் பெறுவதையும், நூலாசிரியர் ஸ்ரீஸ்கந்தராசா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அலுவலர்கள் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள UNDP அலுவலகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அலுவலர்கள், ஐரோப்பிய பிரதிநிதியுடன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர். அவ் விஜயத்தின் போது UNDPயினால் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களின் கள நிலையை அத் திட்டங்களில் பயனாளிகள் மற்றும் பங்காளிகளுடன் கலந்துரையாடுவதன் மூலம் அறிதல் மற்றும் இத் திட்டத்தால் பூரணப்படுத்தப் பட்டவற்றை உரிய பயனாளிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தல் என்பன இடம் பெறும்.

நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தர இருக்கும் நால்வர் அடங்கிய குழுவினர் 22ஆம் திகதியும் இங்கு தங்கியிருப்பர். இதன்போது கீழ்வரும் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் கையளிக்கப்படும்.

- மாவட்ட விவசாய பயிற்சி மையத்தில் மாதிரி உற்பத்தி மற்றும் வியாபார ஸ்தாபனம்.
- புனித நகரில் 40 வீடுகள்
- அல்வாயில் 1.2கி.மீ. நீளமான வீதி
- கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 85 விவசாயக் கிணறுகள்
- தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 50 விவசாயக் கிணறுகள்.
- செட்டிப்புலத்தில சனசமூகநிலையம், 25வீடுகள், 1.5கி.மீ.வீதி.
- புங்குடுதீவில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உணவு உற்பத்தி நிலையம்.
- வண்ணார்பண்ணையில் 24 வீடுகள்.

அத்துடன் 22 ஆம் திகதி பகல் 12 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து பூரணப்படுத்தப்பட்ட வேலைகளை கையளிக்கும் நிகழ்வு இடம்பெறும். அத்துடன் யாழ்.அரசாங்க அதிபருடன் தற்போதைய நாட்டு நிலை பற்றியும் நிகழ்காலமும் மற்றும் எதிர் காலத்தில் மேற்கொள்ளவேண்டியிருக்கும் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல் ஆகியன இடம்பெறும். 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு புனித நகரில் 40 வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். 22ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு செட்டிப்புலம் மற்றும் புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் இடம்பெறும் கையளிப்பு நிகழ்வுகளில் வேலணை உதவி அரசாங்க அதிபர் தலைமை தாங்குவார். (ஓ)

## கல்விச் செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10 இல் ''மனைப் பொருளியல்'' பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-19)

◆◆◆

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10 இல் ''வணிக கல்வியும் கணக்கீடும்'' கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயலமர்வு 24 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது ன்ன வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

◆◆◆

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 இல் ''விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்'' கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-19)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் திருக்கோயில் மஹோற்சவம் இம்மாதம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் யூன்மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும், 18ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஓ)

## கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் வீதிகளைத் திருத்த நிக்கொட் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 10 வீதிகளைத் திருத்திச் செப்பனிடுவதற்கு நிக்கொட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவ் வீதிகளின் திருத்தத்திற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அவை அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நிக்கொட் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இருபாலை கற்பகப் பிள்ளையார் வீதி, உரும்பிராய் வி.ரி. செல்லத்துரை வீதி மற்றும் றோ.க.பாடசாலை வீதி, கோப்பாய் சூசையப்பர் வீதி மற்றும் சொனலு வீதி, சிறுப்பிட்டி பாரதி வீதி, நீர்வேலி வடக்கு ஞானவைரவர் வீதி, அச்சுவேலி வடக்கு கல்லூரி வீதி, அச்செழு தனிப்பனையடி வீதி, கதிரிப்பாய் சுப்பிரமணியம் வீதி ஆகிய வீதிகளே திருத்தம் செய்யப்படவுள்ள வீதிகளாகும்.

இவற்றிற்கான மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்ததும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## செம்மணி இந்து மயானத்துக்கு தீர்த்தக்கேணி

(நல்லூர்)

செம்மணி இந்து மயானத்தில் பிதிர்க்கடன் செலுத்துவோருக்காக தீர்த்தக் கேணி அமைக்கும் வேலை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செம்மணி இந்து மயானத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு ஏற்றதான மடம் இருந்தபோதிலும் தீர்த்தக்கேணி இல்லாத காரணத்தால் அதனை செய்யமுடியாமல் இருந்தது. தீர்த்தக்கேணியின் கட்டட வேலை முடிவடைந்ததும் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையின் செயலாளர் லயன் வ.பரமசிவம் ஜே.பி. தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் சின்னத்துரை ஜெயபதி என்பவர் தனது பெற்றோர்கள் ஞாபகார்த்தமாக ஏற்கனவே இருந்த கிணற்றை தீர்த்தக்கேணியாக மாற்றியமைப்பதற்காக மூன்று இலட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளதாகவும் அந்த நிதியுதவியுடனேயே இப் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செயலாளர் பரமசிவம் தெரிவித்தார். இன்னும் ஓரிரு மாத காலத்தில் கேணியின் வேலைகள் முடிவடைந்து விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

## தமிழ்த்தினப் போட்டிக்காக கொழும்புக்கு செல்வோருக்கான இலவச பிரயாண ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள தமிழ்த்தினப் போட்டிக்கு செல்லும் யாழ் மாவட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கான இலவச கப்பல் பிரயாண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் கப்பல் சேவையினை மேற்கொள்ளும் பெங்கல் குரூஸ் நிறுவனம் தமிழ்த்தினப் போட்டியில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு பயணிக்கும் ரூபா 560/- தமது பங்களிப்பின் மூலம் ஈடுசெய்ய ஒப்புக்கொண்டுள்ளது. மிகுதித் தொகையினை மாவட்டச் செயலகத்திலிருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டபோது மேற்படி பயணிகள் திருகோணமலையில் தங்கி பின்னர் கொழும்பு செல்வது வரையுமான ஏற்பாடுகள் யாவற்றையும் மாகாணக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

திரும்பி வரும் போட்டியாளர்கள் தமது பயண ஏற்பாடுகள் சம்மந்தமாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் க.கணேஷ் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## மகளிர் கல்லூரியின் பெயரை மாற்ற மக்கள் கோரிக்கை

(மானிப்பாய்)

மானிப்பாய் மகளிர் கல்லூரி மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி என்று பெயர் மாற்றப் படவிருக்கிறது. கல்லூரி அபிவிருத்திச் சங்கம் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் 95 சதவீதமானவர்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் கல்லூரி வளாகத்தில் முருகன் ஆலயம் அமைக்கப் பட்டு இருப்பதாலும் அக் கல்லூரியை இந்து மகளிர் கல்லூரியென்று அழைப்பது பொருத்தமாக இருக்கும் என மாணவிகளின் பெற்றோரும் பழைய மாணவர்களும் அபிவிருத்திச் சங்கத்தினரும் நலன்விரும்பிகளும் கேட்டுக்கொண்டதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-5)

## குருபூசை நிகழ்வு

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய இந்து மாமன்றம் நடாத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பூசையைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், சொற்பொழிவும் இடம்பெறுமென பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ-7)

## விசாகப் பொங்கல் விழா

தெல்லிப்பழை மேற்கு-விழிசிட்டி அருள்மிகு வீரபத்திரசுவாமி கோவில் வைகாசி விசாகப் பொங்கல்விழா நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஓ)

◆◆◆

(பருத்தித்துறை)

புலோலி வடகிழக்கு கூழாவடி வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயப் பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகி அறிவித்துள்ளார். (அ-52)

## யாழ்!செய்திகள்

## உழவு இயந்திர சேவை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநல சேவைகள் நிலையம் குறைந்த கட்டணத்தில் உழவு இயந்திர சேவையினை ஆரம்பித்துள்ளது. காலபோக நெற்செய்கைக்காக வயல்களில் உழவு வேலைகளை மேற்கொள்ளும் விவசாயிகளின் நலன் கருதியே இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனியார் உழவு இயந்திரங்களின் கட்டணங்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுவதையடுத்தே கைதடி கமநல சேவை நிலையம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இச் சேவையினை ஆரம்பித்துள்ளது. (அ-5)

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் ஏற்பாட்டில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் அனுசரணையுடன் திருஞானசம்பந்தர் குருபூசை 22ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (அ-7)



ஊர்காவற்றுறை ப.நோ. கூ சங்கத்தின் கோப்சிற்றி திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வை கூட்டுறவு சங்கத்தலைவர் தி. சுந்தரலிங்கம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.



சண்டிலிப்பாய் கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்க மருந்தகத்திறப்புவிழாவை கூட்டுறவுச் சங்கத்தலைவர் தி. ராஜ்குமார் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி சி.பி. மரியதாசன் மற்றும் சங்க இயக்குனர் சபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்திற்கு மட்டுவில் கிழக்கு சிறுவர் கழகத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு தொகுதி காலணிகளை வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன மாணவர்களுக்கு வழங்குவதையும் சிறுவர் கழகத்தலைவர் த. அஜீபன் மற்றும் பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.



கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டியில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் போட்டிகளில் வெற்றி பெற்ற அணித்தலைவர்களுக்கு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வெற்றிக் கேடயங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# புலிகள் தாக்கலாமென இராணுவம் எச்சரிக்கை

(கொழும்பு)

வெசாக் தினத்தில் பொதுமக்கள் கூடும் இடங்களில் தாக்குதல்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிக்கலாமென இராணுவத் தலைமையகம் எச்சரித்துள்ளது. இது தொடர்பான எச்சரிக்கை இராணுவ தலைமையகத்திடமிருந்து கிடைக்கப்பெற்றிருப்பதாக தகவல் திணைக்களத்தலைவர் அனுஷா பெல்பிட்டிய கூறியுள்ளார்.

பொதுமக்கள் கூடும் இடங்களில் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி அதன் மூலம் கூடுதல் சேதங்களையும் ஏற்படுத்த முடியும் என சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

நகரங்கள், சந்திகள் மற்றும் முக்கிய இடங்களில் பொதுமக்கள் பெருமளவில் ஒன்று கூடும் இடங்களில் அவர்களின் ஒன்றுகூடலை ஊக்குவிக்க வேண்டாமென பாதுகாப்பு தரப்பினர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, கடந்த 15ஆம் திகதி முதல் 11 நாட்கள் விசேட பாதுகாப்பு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் அறிவித்துள்ளது. வெசாக் தினத்தை முன்னிட்டு தாக்குதல்கள் நடத்தலாமென எதிர்பார்த்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக அந்த நிலையம் அறிவித்துள்ளது.

வன்னிப் பகுதியில் பின்னடைவுகளை எதிர்நோக்கிவரும் விடுதலைப்புலிகள் தென் பகுதியில் தாக்குதல்களை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக இராணுவம் எச்சரித்துள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகமொன்று மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

# விசேட பஜனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீசத்தியசாயி பாபா சாயி மந்திரில் வைகாசி விசாக தின பாத பூசையும், விசேட பஜனை இசை நிகழ்வுகளும் இம் மாதம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட பஜனை இசை நிகழ்வுகளை தென் இந்திய சாயிவரதன் இசைக் குழுவினர் நடாத்துவார்கள்.

நண்பகல் இடம்பெறும் விசேட பூசைகள் ஆராதனைகளையடுத்து மகேஸ்வர பூசை நடைபெறுமென சாயி மந்திர் நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (எ-52)

# கத்திக்குத்துக்கு இலக்கான சிறுவன் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

நாவந்துறையைச் சேர்ந்த எம்.கஜமுகன் (வயது-16) என்ற சிறுவனே கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

பிரஸ்தாப சிறுவன் வீட்டில் இருந்த சமயம் அங்கு சென்ற குழுவொன்று அவரைத் தாக்கிவிட்டு கத்தியால் குத்தியதாக தெரிவிக்கப்பட்டது. (எ-3,4)

# விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் மதுரையில் கைது

(சென்னை)

தமிழ்நாடு மதுரையில் இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.

தமிழ் நாட்டின் ஊடாக, இலங்கையின் வடபகுதிக்கு கடத்துவதற்காக லொறி ஒன்றில் உயர் ரக தொலைத் தொடர்பு சாதனங்கள் உள்ளிட்ட உபகரணங்களை கொண்டு சென்ற சமயம் மதுரையில் வைத்து திடீர் வீதி சோதனை மூலம் மதுரை கியூப் பிரிவு பொலிஸார் இவர்களை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளோர். பி.விஜி என அழைக்கப்படும் மன்னார் பேசாலையைச் சேர்ந்த ஜெயராஜ், சின்னவன் என அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்மராசா ஆகியோர் எனவும் இவர்கள் நேற்று முன்தினம் மதியம் ஒரு மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மதுரை கியூப் பிரிவு பொலிஸாரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-5)


## • தேவை

துவைற்,டுபாய்,கட்டார்,போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் Salesman (supermarket) Security guard, Helpers, House maids இன்னும் பல வேலைவாய்ப்புகள். ஊடனடியாக போகக்கூடியதாக உண்டு மேலதிக விபரங்களுக்கு. **LOTUS JOBS BANK**. No.10,Rudra Mawatta Colombo 06. Tp: 0112361336.



## சமூக சேவையில் பொன் விழாவும்; நீதிச் சேவையில் வெள்ளி விழாவும் காணும்

**திரு.தம்பையா சிவபரஞ்சோதி B.A (சமாதான நீதவான்) அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



ஈழவள நாட்டின் மூளைவள தீவகத்தின் முதல் தீவாம் மண்டைதீவில் பிறந்து, தமிழகத்தில் கல்வி பயின்று மீண்டும் தாய் மண்ணில் வாழ்ந்து அம் மண்ணின் தளராத வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து சமுதாயப் பணிகளில் அதி உயர் பணியாக சமாதான நீதவான் என்னும் பதவியை ஏற்று எம் மக்கள் எம் மண்ணில் வாழ்ந்த போதும் அவர்கள் புலம் பெயர்ந்த போதும் அவர்களை தேடிச் சென்று சேவைகள் ஆற்றிய, என்றும் இளமையுடன் துள்ளித் திரியும் வெள்ளிவிழா நாயகன் **திருவாளர் தம்பையா சிவபரஞ்சோதி** அவர்களின் சேவை நலம் பாராட்டுவதில் எமது ஒன்றியம் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது. எம் மண்ணின் மைந்தன் ஒருவன் மகத்தான, அதேநேரம் கௌரவப் பதவியை ஏற்று தனக்கும் தான் பெற்ற பதவிக்கும் சற்றேனும் களங்கம் ஏற்படாமல், மாறாக பெற்ற பதவிக்கு பெருமையும் மரியாதையையும் ஏற்படுத்தி இருபத்தைந்து ஆண்டுகள் (கால் நூற்றாண்டு) உழைத்த உத்தம புத்திரனை எமது ஒன்றியம் உணர்ச்சி பூர்வமாக பாராட்டுகின்றது.

**வெள்ளி விழா நாயகன் வெற்றி வீரன் திரு சிவபரஞ்சோதி அவர்கள் பற்றி சில நினைவுகள்...**

மண்டைதீவில் பிரபல்யமான சைவ குடும்பத்தில் ஏக புத்திரனாக பிறந்த இவர் தமது மேற் கல்வியினை தமிழ் நாட்டில் பயின்றார். இவன் பேச்சினில் விளைவது கரும்பு. இவன் பார்வையில் தெரிவது குறும்பு. விடா முயற்சியில் இவன் ஒரு எறும்பு. சுறு சுறுப்பிலே இவன் ஒரு தேனீ. சுய வாழ்விலும் இது தான் இவன் பாணி. எந்தத்துறையிலும் இவரது சமூகப்பணி பின் நிற்பது இல்லை. சமுதாயப் பணியானாலும், சமயப் பணியானாலும், மொழிப் பணியானாலும் இவரின் பங்கு அங்கே முதன்மை பெற்றிருக்கும். விளையாட்டுத்துறை இவருக்கு இனிப்பான உணவு. மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகம் உருவானதில் இவரின் பங்கு பெரும் பங்கு. கல்வித்துறை இவருக்கு கற்கண்டுப்பாகு.

மண்டைதீவு பாடசாலை அபிவிருத்தியில் இவர் முத்திரை இல்லாத இடமே இல்லை. இவரின் சமுதாயப் பணிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அமையப் பெற்றதுதான் சமாதான நீதவான் எனும் தங்கப் பதக்கம். அதையும் சுமந்து இப்போ இருபத்தைந்து வருடங்கள் கடந்து விட்டன. வாழ்த்துக்கள்! மீண்டும் மீண்டும் வாழ்த்துகிறோம். தொடருங்கள் தடைக்கற்கள் படிக்கல் ஆகும் தொடருங்கள்.

'பாராட்டு' இது ஒரு பண்பான ஊக்குவிப்பு. உரமுள்ள போதை. இந்தப் போதை தலையில் ஏறினால் செயற்பாட்டில் முன்னேற்றம், தீவிரசக்தி வெளிப்பாடு, இது தேசம் வாழ நாம் இடும் உரம். சமூகப் பணியாளர்கள் கலைஞர்கள், தேசப்பற்றாளர்கள், சமயத் தொண்டர்கள். வல்லுனர் யாவரும் பாராட்டப்படவேண்டியவர்கள். அதுவும் உயிருடன் இருக்கும்போதே பாராட்டப்பட வேண்டியவர்கள். ஈழத்திலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி, இத்தகையோருக்குரிய பாராட்டுக்கள் உயிருடன் இருக்கும்போது பாராட்டப்படுவது மிகவும் சொற்பமே. இது தவிர்க்கப்படவேண்டும். உன்னதமான ஒரு வார்த்தை உலகத்தை வெல்ல வைக்கும்.

மண்டைதீவு மக்கள் ஒன்றியம் வட அமெரிக்காவில் கிளை பரப்பி நின்றாலும் ஆணிவேர் எப்போதும் அன்னை மண்ணில் தான். அங்கு ஏற்படும் சிறு அதிர்வுகளும் இங்கே எதிரொலிக்கும்.

திரு.சிவபரஞ்சோதி J.P அவர்களின் வெள்ளி விழா நிகழ்வினை வெளிக்கொணர்ந்த குழுவினருக்கு எமது பாராட்டுக்களும் நன்றிகளும்.

**திரு சிவபரஞ்சோதி J.P** அவர்கள், அவர் பணிகள், அவர் குடும்பம் அத்தனையும் நீடு வாழ்க என மண்டைதீவு மக்கள் ஒன்றியம் மீண்டும் மீண்டும் வாழ்த்துகிறது.

**மண்டைதீவு மக்கள் ஒன்றியம் (கனடா)**

(1226)



## யாழ்நகரில் முதன் முறையாக

**Microsoft MCSE**

**Certified System Engineers**

**MCP MCTS MCSE MCSA**

மைக்ரோசொப்ற் பரீட்சை நிலையம்

- **MCS** நிறுவனம், உலகப்பிரசித்தி பெற்ற MICROSOFT நிறுவனத்தின் கணனி வலையமைப்பிற்கான (Computer Networking) Microsoft Certified System Engineer [MCSE] கற்கை நெறியை கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.
- பரீட்சைகள் MICROSOFT நிறுவனத்தினால் **MCS** நிறுவனத்தில் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும், உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் MICROSOFT நிறுவன அதிபர் Bill Gates இனால் வழங்கப்படுகின்றது.
- பல்வேறு கட்டங்களாக தொடரக்கூடிய இக்கற்கை நெறியில் முதலாவது Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified Professional **[MCP]** சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மேலும் 6 Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified System Engineer **[MCSE]**சான்றிதழும் வழங்கப்படுகிறது
- வெளிநாடுகளில் அதிக ஊதியத்துடன் வேலைவாய்ப்புக்களைக் கொண்டுள்ள Network Manager, System Administrator ஆகிய துறைகளுக்கு MCSE, MCSA தகுதி பெற்றோரே தெரிவு செய்யப்படுகின்றனர். மேலும் MCSE தகுதி பெற்றோருக்கு விசா நடைமுறைகளின் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது
- வெளிநாடுகளில் 7 x (225+400))$US செலவாகும் மைக்ரோசொப்ற் பொறியியலாளர் கற்கை நெறியை இலங்கையில் மிகக்குறைந்த செலவில் கற்கும் சந்தர்ப்பம்.

**மேலதிக விபரங்களிற்கு, நேரில்**



**Mobile@net Computer Services (MCS), 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணத்தில் கற்கை நெறிகளையும், பரீட்சைகளையும் நடாத்தும் தனித்துவமான நிறுவனம்



Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

(C-1150)

## பிலிப்பைன்ஸில் கடும் சூறாவளி 12 பேர் பலி, 3ஆயிரம் வீடுகள் சேதம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டை கடும் சூறாவளி தாக்கியதில் இதுவரை 12 பேர் பலியானதாக தெரிகிறது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். 3ஆயிரம் வீடுகள் சூறாவளிக்கு இரையாகியுள்ளன. மின்கம்பங்கள் தூக்கி எறியப்பட்டதால் மின் வெட்டு ஏற்பட்டுள்ளது. தொலை தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. வானிலை ஆராய்ச்சியாளர்கள் சூறாவளி ஜப்பான்தலைநகர் டோக்கியோவை நோக்கி நகர்ந்து வருவதாக தெரிவித்தனர். (அ-5)

## மனித வெடிகுண்டு தாக்குதலில் 13 பேர் பலி, 22 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் மார்டன் பகுதியில் மனித வெடிகுண்டாக வந்த மர்ம நபர் மக்கள் நடமாட்டம் மிகுந்த சந்தைப் பகுதியில் வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

இக்குண்டு வெடிப்பில் 13 பேர் பலியாகினர். மேலும் 22 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் நான்கு பேர் பாதுகாப்பு படை வீரர்கள் ஆவர். காயமடைந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இக்குண்டு வெடிப்புக்கு உள்ளூர் தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். (அ-5)

## பாலஸ்தீனர்களை காப்பாற்ற உதவுமாறு எகிப்து தீவிரவாதிகளுக்கு பின்லேடன் அழைப்பு

(கெய்ரோ)

பாலஸ்தீனர்களை காப்பாற்ற உதவுமாறு எகிப்து தீவிரவாதிகளுக்கு சர்வதேச பயங்கரவாதி ஓசாமா பின்லேடன் அழைப்பு விடுத்துள்ளான்.

பாலஸ்தீனர்களின் நலன்களை அரபு நாடுகளின் தலைவர்கள் தியாகம் செய்துவிட்ட தாக அவன் குற்றம் சாட்டியுள்ளான்.

அல்கொய்தா அமைப்பின் தலைவரும் சர்வதேச பயங்கரவாதியுமான ஓசாமா பின்லேடன் புதிய ஒலிப்பதிவு நாடாவொன்றை வெளியிட்டுள்ளான்.

அரபு நாடுகளின் தலைவர்களை படையெடுப்பாளர்களின் பிரதிநிதி என்றும் ஓநாய்கள் என்றும் பின்லேடன் விமர்சித்துள்ளான்.



அரபு நாட்டு மக்கள் இந்த ஓநாய்களின் பாதுகாப்பில் விடப்பட்டுள்ள ஆட்டு மந்தை என் றும் அவர் கூறியுள்ளான்.

அரபு நாடுகளின் மன்னர் தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக பாலஸ்தீனத் தையும் பழமை வாய்ந்த அல் அக்ஸா மசூதியையும் தியாகம் செய்து விட்டதாக அவன் குற்றம் சாட்டியுள்ளான்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் பின்லேடன் வெளியிட்ட ஒலிப்பதிவு நாடாவில் இஸ்ரேலுக்கு எதிராக தொடர்ந்து போராடப் போவதாக கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மீட்புப் பணியாளர் 200 பேர் நிலச்சரிவில் பலி

(பீஜிங்)

சீனாவில் பூகம்பத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்த 200 பேர் நிலச்சரிவில் சிக்கி பரிதாபமாக உயிழந்தனர்.

சீனாவில் கடந்த வாரம் ரிச்டர் அளவு கோலில் 8 புள்ளிகளாக பதிவான பூகம்பம் தாக்கியது. இதில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் பூகம்பம் தாக்கிய பகுதியில் நேற்றுக் காலை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த 200 பேர் பூமிக்குள் புதையுண்டதாக சீன அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-5)

## உலக தரிசனம்

## பாகிஸ்தானுடன் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா முயற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இந்தியா தயாராக உள்ளது என்ற தகவலைத் தாங்கியவாறு புதிய பாகிஸ்தான் அரசாங்கத்துடன் உயர் மட்டப் பேச்சுக்களை நடத்துவதற்காக இந்திய வெளி விவகார அமைச்சர் பிரணாப் முஹர்ஜி இன்று இஸ்லா மாபாத் புறப்படு கிறார்.



வன்முறைகள் நிறுத்தப்பட்டாலே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கான சூழ்நிலை ஏற்படும். இரு நாடுகளுக்கும் இடை யிலான உறவுகளை மேலும் பலப்படுத்து வதற்கு சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கையுடனேயே நாங்கள் பாகிஸ்தான் செல்கிறோம் என இஸ்லா மாபாத் புறப்படுவதற்கு முன்னர் இந்திய வெளி விவகார அமைச்சின் செயலாளர் சிவசங்கர் மேனன் கூறினார்.

சிவசங்கர் மேனன் பாகிஸ்தான் வெளி விவகார அமைச்சின் செயலாளர் சல்மான் பஷீரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள் ளார். நாளை இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முஹர்ஜியும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மஹடூம் ஷா மஹமூட் குவெரிஷ் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பிராணப் முஹர்ஜி தனது இரண்டு நாட்கள் பாகிஸ்தான் விஜயத்தின் போது பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவர் ஆசிப் அலி சர்தாரியையும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானியையும் சந்தித்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் முதல் தடவையாக இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னர் எங்கு நிறுத்தப்பட்டனவோ அங்கிருந்து தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது பற்றி ஆராயப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-5)

## மனித சக்தியை 20 மடங்காக அதிகரிக்கும் உலோக சாதனம்

ஒரு மனிதனின் சக்தியை 20 மடங்காக அதிகரிக்கக்கூடிய நவீன உலோக சாதனமொன்றை மென்பொருள் பொறியியலாளரான ரெக்ஸ் ஜேம்ஸன் வடிவமைத்துள்ளார்.

இந்த உலோக சாதனத்தை அணிந்து போரிடுவதன் மூலம படையினரின் வினைத் திறனை அதிகரிக்க முடியும் என கூறப்படுகிறது. ஆனால் மேற்படி உலோக இலத்திரனியல் சாதனத்துக்கென பயன்படுத்தப்படும் மின்பற்றறி 30 நிமிட நேரமே செயற்பட கூடியது என்பதும் இவ் உலோக சாதனத்தயாரிப்புக்கு ஏற்படக்கூடிய அதிகூடிய செலவும் இச்சாதனத்தை பாவனைக்கு கொண்டு வருவதை தாமதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-5)



## முட்டை போட்டு பால் கொடுக்கும் அவுஸ்திரேலிய விசித்திர பிராணி

(பரீஸ்)

மீனைப் போல் தண்ணீரில் நீந்திச் செல்லும் வாத்தைப் போன்று கால்களும், அலகும் கொண்டது. ஊர்வன வகைகளின் விசித்திர குணங்களும் உண்டு. முட்டை போடும் பாலூட்டி இனத்தைப் போல குட்டிகளுக்கு



பால் கொடுக்கும் ஆனால் மடி காம்பு இருக்காது. இப்படி ஒரு விசித்திர பிராணி அவுஸ்திரேலியாவின் கிழக்கு பகுதி மற்றும் தாஸ்மேனியாவில் உள்ளது.

இப் பிராணியின் டி.என். ஏ.குறித்து பல நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி புதிய தகவல்களை கண்டு பிடித்துள்ளனர். 'பிளாடிபஸ்' என்ற நீர் வாழ்விலங்குதான். இத்தனை விசித்திர குணங்களைக் கொண்டுள்ளது. இந்த விலங்கின் பெண் இனத்துக்கு பால் சுரக்கும் அடர்த்தியான முடிகள் உடைய தோலைக்கொண்டது. எனவே இந்த அரிய வகை விலங்கை பாலூட்டி இனத்தில் சேர்த்துள்ளனர். 'பிளாடிபஸ் விலங்கு 17 ஆண்டுகள் வரை உயிர் வாழும் புழுக்கள், பூச்சிகள், இறால், நண்டு ஆகியவற்றை உட்கொள்ளும். தனது உடலின் எடையில் 20சதவீதம்அளவுக்கு தினமும் உணவு உட்கொள்ளும். ஆண் விலங்கு 50 செ. மீ நீளம் வரை வளரும் . இரண்டு கிலோ எடை கொண்டிருக்கும். நீளம் மற்றும் எடையில் 20 சதவீதம் குறைந்து பெண் விலங்கு காணப்படும்.

முதன் முதலில் இந்த அரியவகை விலங்கு குறித்து 18 ஆம் நூற்றாண்டில் தான் ஐரோப்பிய விஞ்ஞானிகளுக்கு தெரிய வந்தது. அப்போது முதல் இதன் தன்மை குறித்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர். நீரிலும் நிலத்திலும் வாழும் எலி உருவம் கொண்ட பிராணிக்கு மென்மையான மிகவும் விலை உயர்ந்த முடிகள் இருக்கும் அதே போன்ற தோற்றத்தில் தான் பிளாடிபஸ் விலங்கு காணப்படுகிறது. ஆனால் வாத்தைப் போன்று அலகு மற்றும் கால்களைக் கொண்டுள்ளது. பெண் விலங்குக்கு மடி காம்பு கிடையாது. எனினும் வயிற்றின் அடிப் பகுதியை மூடியிருக்கும் தோலின் மூலம் பால் சுரக்கிறது. பெண் விலங்கு ஊர்வன வகைகள் போல முட்டைகள் இடும். ஆண் விலங்கு, பின் பக்ககாலின் குதிக்கால் பகுதியில் பாம்பை போன்று விஷத்தை அடக்கி வைத்துள்ளது. எதிரி பிராணிகள் தாக்க வரும் போது இந்த விஷத்தை வீசி ஆண் விலங்கு எதிர்தாக்குதல் நடத்தும்.

சில பாலூட்டி இனங்கள் முட்டைகள் இடும். இவற்றுக்கு என சில அரியவகை குணம் உண்டு. அந்த குணமும் பிளாடிபஸ் விலங்குக்கு உள்ளது. கண்கள், காதுகள், மூக்கு மூடப் பட்டு இருந்தாலும் இரையாக வரும் பிராணிகளில் உடலில்இருந்து வெளிப்படும் மின் அலைகளைஉணரும் சக்தி இந்த விலங்கின் அலகின் கீழ் பகுதியில் அமைந்துள்ளது. இந்த அரிய வகைவிலங்கின் டி.என். ஏ. வை லண்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், கேம்பிட்ஜில் உள்ள ஐரோப்பிய ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்துள்ளனர். அவர்கள் கூறுகையில் பறவை ஊர்வன வகை மற்றும் பாலூட்டி இனம் ஆகியவற்றின் மரபணுக்களின் தொகுப்பை இந்த விலங்கு கொண்டுள்ளது. மனிதர்களுக்கு இரண்டு குரோமோசோம்கள் தான் இருக்கும் ஆனால் இந்த விலங்குக்கு 10 குரோமோசோம்கள் உள்ளன. 17 கோடி ஆண்டுகளுக்கு முன் தனது மூதாதையரிடமிருந்து இந்த விலங்கு தனித்து பிரிந்து இருக்கலாம் என்றனர். (அ-5)

## ஐ.நா.பொதுச் செயலாளர் நாளை மியான்மர் விஜயம்

### வெளிநாட்டு உதவியை ஏற்க வற்புறுத்துவார்

(ஐநாசபை)

நர்கீஸ் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மியன்மாருக்கு ஐ.நா பொதுச் செயலாளர் பான்கி மூன் நாளை விஜயம் செய்யவுள்ளார்.

சுமார் 1 லட்சம் பேரை பலிகொண்ட சூறாவளியால் பாதிக்கப்பட்ட மியன்மார் அந்நிய நிவாரண உதவிகளை ஏற்க வேண்டும் என்று மியன்மர் இராணுவ ஆட்சியாளர்களை அவர் கேட்டுக் கொள்ளவுள்ளார்.

சூறாவளியில் சிக்கி ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருவதாகவும் இவர்களில் பலர் பல்வேறு விதமான நோய்களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும்ஐ.நாசபை கணித்துள்ள நிலையில் மியான்மருக்கு பான் கி மூன் பயணம் மேற்கொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது.

நிவாரண உதவிகள் தொடர்பாக மியான்மர் இராணுவ தலைவரை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள பான் கி மூன் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில், அவர் நேரடி பயணம் மேற்கொள்கிறார் என்று ஐ.நா செய்தித் தொர்பாளர் தெரிவித்துள்ளார்.

(அ-5)

## 'ரோஸ்ட் வேஸ்ட்'!

பொரியல் செய்யப்படும் உணவுகளில் உள்ள சர்க்கரை சத்தின் நுண்துகள்கள், தோலின் உள்ளே இழைகளாக பரவி இருக்கும் புரோட்டீன்களில் கலந்து அதன் தன்மையை மங்கச் செய்துவிடும். இதனால், தோல் பகுதி வறண்டு போகிறது. வயதான தோற்றத்தைத் தருகிறது. சிரித்தால் கூட, தோல் பகுதி, கண்டபடி சுருங்கி, அசிங்கமாக தோற்றமளிக்கும்.

இப்படியான இனிப்புப் பண்டங்கள் மட்டுமல்ல, அதிகநேரம் 'ரோஸ்ட்' செய்யப்பட்ட கோழிக்கறி, வாணலியில் கரி ஏறும் அளவுக்கு முறுகல் என்ற பெயரில் கருக வைக்கும் உருளைக்கிழங்கு 'ப்ரை' பொரியல், பொன்னிறமாகும் அளவுக்கு தயாரிக்கப்படும் சில வகை உணவுகள் போன்ற எல்லாவற்றிலும் .இந்த நுண்துகள்கள் இருக்கிறது. இவை தோல் அழகை கெடுத்துவிடும்.

## காது அடைப்பா?

காதினுள் மெழுகு போன்ற திரவத்தை, காது சுரப்பி சுரக்கிறது. இந்த மெழுகு தான், காதில் வெளிப்பக்கம் பரவி, அழுக்கு, பக்டீரியா போன்றவை உள்ளே புகாமல் தடுத்து விடுகிறது. பொதுவாக குளிக்கும் போது, காதை சுத்தம் செய்யும் போதே, இந்த மெழுகு தானாக நீங்கிவிடும். சிலருக்கு இந்த மெழுகு சேர்ந்து விடக்கூடும் அவர்களுக்குத் தான் அடிக்கடி காது அடைப்பு ஏற்படும்.

காது மெழுகை சுத்தப்படுத்துவது என்பது, தினமும் குளித்தவுடன், மிருதுவான டவலால் மெதுவாக காதின் வெளிப் பகுதியில் மட்டும் துடைத்தால் போதும். மெழுகை எடுக்கிறேன் பேர்வழி என்று, காதின் உள்ளே விட்டு, கரடு முரடாக தேய்ப்பது கூடவே கூடாது.

## நல்லது தான்

சூயிங்கம் சாப்பிடுவது கெட்டதா? நல்லதா? எதையும் மிதமிஞ்சி சாப்பிடுவது கெட்டதுதான். சூயிங்கம் சாப்பிட்டால், கலோரி குறைந்துவிடும் என்பது உண்மை.சூயிங்கம் சாப்பிட்டால், அது வயிற்றில் தங்கிவிடும் என்று சிலர் தவறாக எண்ணுவர்.ஆனால், உண்மையில் மற்ற உணவுகளைப் போல, அதுவும் மலமாக வெளியேறி விடுகிறது.

வெயிலில் காய்ந்தாலும்... அப்பாடா என்ன வெயில்... என்று நீங்கள் அலுத்துக் கொள்ளாதீர்கள். 40 டிகரி செல்சியஸ் வெயிலில் ஒரு நன்மை இருக்கிறது தெரியுமா? வேகமாக வெயிலில் அலைந்து திரும்பிய ஒருவருக்கு மணிக்கு 15 கலோரி குறைகிறது.

அதற்காக, நண் பகல் வெயிலில் அதிக நேரம் அலைந்தால், "சன் ஸ்ட்ரோக்" வந்து விடும்.ஜாக்கிரதை.

## காது கிழி கிழி...

மொபைல் போன், ஐபாட் போன்றவற்றில் இருந்து சினிமாப் பாடல்களை அலற விட்டு " காது மிஷின்" போல "இயர் போனில்"கேட்பது இளைய வயதினருக்கு குஷியை தருகிறது ; ஆனால், காது ''மால்'' ஆகிவிடும். நடுத்தர வயதில், ஒருமணிநேரம் ''ஹெட்போன்'' காதில் பொருத்தியிருந்தால், காதில் பக்டீரியா சேருவது, 700 மடங்கு அதிகமாகிறது. நாற்பதுக்கு மேல் யார் கூப்பிட்டாலும், ஆங்.. என்னாது...என்று செவிடாகி விடுவீர்கள். புரியுதா?

## "ஸ்மெல்" தெரியுதா?

உங்களுக்கு"ஸ்மெல்" பிடிக்கத் தெரியுமா? அப்படி இல்லாவிட்டால்தான், "அனோஸ்மியா" பிரச்சினை இருப்பதாக பொருள். சதவீதம் பேருக்கு இந்தப் பாதிப்பு உள்ளது என்கின்றனர் நிபுணர்கள். சிலர், மூக்கை எப்போது பார்த்தாலும், ஏதோ பெயிலில் காயப்படுவது போல், மேலே நோக்கியபடி, ச்ர்ர்ர்... என்று இழுப்பர். கேட்டால், "வாசனையே தெரியலியேப்பா..." என்பர். மூக்கில் அடைப்பு வந்தாலோ, நரம்பு பாதிக்கப்பட்டாலோ தான்.நுகர்வு உணர்வு மங்கும். சாப்பிடும் உணவுப் பொருள் வாசனையை வித்தியாசமாக உணருவர்.

## கரகர தொண்டை

ஜலதோஷத்துக்கு காரணம், ரினோ வைரஸ்கிருமி. ஜலதோஷத்தால் அவதிப்படுபவர், கைக்குட்டையில் இந்த வைரஸ் தொற்றும். இரண்டு மணிநேரம் உயிருடன் காற்றில் இருக்கும். அதனால், ஜலதோஷம் வந்துவிட்டால் கைக்குட்டையை பயன்படுத்த வேண்டும். மூக்கை மெதுவாக ஒற்றியெடுக்க வேண்டும்.

கைகளை அவ்வப்போது அலம்ப வேண்டும். கரகரப்பு தொண்டை, மூக்கு ஒழுகல் இரண்டும் தான், ஜலதோஷத் தின் அறிகுறி. மாத்திரை சாப்பிடுவதுடன், அதிக தண்ணீர் குடிக்க வேண்டும். உப்புத் தண்ணீரிலே கொப்பளிக்க வேண்டும்.

# காந்த சிகிச்சையின் மூலம் நோய்களை குணப்படுத்த முடியும்



டாக்டர் எம்.ஜி.அண்ணாதுரை D.E.H.M.,Ph.D.
காந்த சிகிச்சை ஆராய்ச்சி மையம்

உலகத்தில் எண்பதுக்கும் மேற்பட்ட சிகிச்சை முறைகள் உள்ளன. அவற்றில் ஆங்கில மருத்துவம் மற்ற சிகிச்சை முறைகளைக் காட்டிலும் அதிகளவில் விரும்பப்படுவதற்கு காரணம், அந்த சிகிசைமுறை கொண்டிருக்கும் வெளிப்படையான அணுகுமுறை மற்றும், பொதுவான தன்மை,ஆங்கில மருத்துவம் கண்டறிவதற்கு முன்னரே சித்தமருத்துவம், ஆயுர்வேதம்,அக்குபஃஞ்சர், யுனானி உள்ளிட்ட பல சிகிச்சை முறைகள் வந்துவிட்டன.

இவைகளை ஒரு சிலரே கைவரப் பெற்றிருந்ததாலும்,இவர்கள் கண்டறிந்த சிகிச்சை முறைகளை அடுத்த தலைமுறையினருக்கு சொல்லித் தருவதில் சில சங்கடமான நிலை நிலவியதாலும், இதன்முக்கியத்துவம் உலக மக்களுக்குத் தெரியாமல் போயின. இந்நிலை யில் பல சிகிச்சை முறைகளைப் பின்பற்றினாலும் தீராத நோயைக் கொண்டிருந்தவர்களுக்கு காந்த சிகிச்சை மூலம் தீர்வு கிடைக்கிறது என்று கேள்விப்பட்டதும், காந்த சிகிச்சை என்றால் என்ன? இதன்மூலம் தீர்க்கக் கூடிய நோய்கள் என்ன? என்பது குறித்து இத்துறையின் நிபுணரான டாக்டர் எம்.ஜி. அண்ணாதுரை அளித்த விளக்கம் இதோ...

## மருத்துவ விளக்கம்

*◆ காந்த சிகிச்சை என்றால் என்ன? இந்த சிகிச்சையின் மூலம் எம்மாதிரியான நோய்களை குணப்படுத்த முடியும்?*

நம் எல்லோருடைய உடம்பிலும் காந்த சக்தி ஓரளவு இருக்கிறது. இந்த காந்த சக்தியின் அளவு குறையும்போது நமது உடலை இயக்கும் மின்சக்தியின் அளவும் குறைகிறது. நம்முடைய ஒவ்வொரு உறுப்பிலும் மிக குறைந்த அளவிலான மின்சக்தி உள்ளது.அதனுடன் இணைந்துள்ளது தான் காந்த சக்தி. இந்த இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எல்லா நோய்களும் குணமாகும் போது உடலில் காந்த சக்தி அதிகரிப்பதுடன் குறிப்பிட்ட அளவில் மின்சக்தியும் அதிகரித்திருக்கும். காந்த சிகிச்சை என்பது ஒரு இயற்கை முறையிலான சிகிச்சை. இந்த சிகிச்சை முறை நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பொதுவாக காந்தம் என்றால் அதற்கு இரு துருவம் இருக்கும்.ஒன்று வடதுருவம். மற்றொன்று தென்துருவம். அதைப்போல் நமது உடலை ஆராயும்போதும் வலது பக்கம் வடதுருவமாகும் இடது பக்கம் தென்துருவமாகவும் கூறுகிறார்கள். இடுப்புக்கு மேல் பகுதி வடதுருவம் என்றும், இடுப்புக்கு கீழ் தென்துருவம் என்றும் முன்பக்கம் வடதுருவம் என்றும், பின்பக்கம் தென்துருவம் என்றும் மேலும் ஒரு உறுப்பை தனியாக எடுத்தோமானால் அதன் வெளிப்புறம் வடதுருவம் என்றும், உட்புறம் தென்துருவம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி இரு துருவங்களில் உள்ள சக்திகள் எதிரெதிராக மோதுவதால் தான் இயக்கமே நடைபெறுகிறது. நோயுற்றிருக்கும் போது உறுப்புகளை ஏற்ற வகையில் காந்தத்தின் மீது 10 நிமிடமோ அல்லது அதற்கும் கூடுதலாக சில நிமிடங்களே வைத்திருக்கும்போது, உடலுக்கு கூடுதலாக நோய் எதிர்ப்பு ஆற்றல் கிடைக்கிறது. நோய் எதிர்ப்பு ஆற்றல் இருந்தால், எந்த நோயும் நம்மை தீண்டாது. இது காந்த சிகிச்சை யின் தத்துவம், அதாவது உடலுக்கு காந்த சிகிச்சையின் மூலம் நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெருக்கிக் கொள்கிறோம்.

காந்தங்களின் துருவங்களுக்கு என்ன குணம் இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்தார்கள். அதில் வடதுருவங்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்கு குளுமைத்தன்மையும், ஒரு பொருள்மேல் காந்தத்தை வைத்தால் அங்கு அணுசிதைவும் நடைபெறும். தென் துருவங்களில் வெளிப்படும் கதிர்வீச்சுக்கு வெப்பத்தன்மை இருப்பதும் அதனால் தொடர்ந்து எல்லா செயல்களும் ஊக்கப்படுத்தி வேகத்தைக் கூட்டும். புளிப்புத் தன்மை அதிகம்.

நம் உடலில் இருக்கும் பாகங்களில் இன்றியமையாததாக இரண்டைக் குறிப்பிடுவர். அதில் ஒன்று இருதயம் மற்றொன்று கல்லீரல். இருதயம் இயங்கினால் தான் எல்லாமே இயங்கும். கல்லீரல் தான் உணவை செரித்து, உடலில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சக்தியாக அனுப்புகிறது.கல்லீரலில் சுரப்பது புளிப்பான திரவம். இங்கு ஏற்படும் சரிசமமற்ற விகிதத்தை, வடதுருவ காந்தப் பகுதியை வலதுபுறம் வைப்பதன்மூலம் சரிசமமாக்க முடிகிறது.அதேபோல் இடதுபுறம் இருக்கும் இதயத்தின் சக்தியை அதிகரிக்க, தென்துருவ காந்த பகுதியை இடதுபுறம் வைக்கலாம். இதனால் உடம்பில் இருக்கும் நோய் குறையும். இதைத் தவிர்த்து வலி, ஆஸ்துமா, அலர்ஜி ஆகியவற்றிற்கான சிறந்த தீர்வாக காந்த சிகிச்சை விளங்குகிறது. வடதுருவத்தை வலது கையிலும், தென்துருவத்தை இடது கையிலும், வைப்பதன் மூலம் தொப்புளிலிருந்து உச்சந் தலை வரைக்கும், வடதுருவத்தை வலது காலிலும், தென்துருவத்தை இடது காலிலும் வைத்திருப்பதன் மூலம், இடுப்புக்கு கீழ் முதல் அடிப்பாதம் வரை நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. இதில்லாமல் எரிச்சல், நமைச்சல், கட்டி, புண் மற்றும் வேண்டாத சதை வளர்ச் சிகளான மரு, பரு, புற்றுநோய் கட்டிகள் ஆகியவற்றிற்கு இடது, வலது என்று பேதம் பார்க்காமல் வலது புறத்தில் காந்தத்தை வைத்து சிகிச்சை எடுத்தால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைப்பது உறுதி. அதேபோல் கருப்பை வளர்ச்சியின்மை, மலட்டுத்தன் மை, ஆண்மைகுறைவு, இன்சுலின் சுரக்காத சர்க்கரை நோய் உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்கு தென் துருவத்தில் வைத்து சிகிச்சை அளித்தால் பலன் கிடைக்கும்.

*◆ பதினெட்டாம் நூற்றாண்டில் டாக்டர் மெஸ்மர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட காந்த சிகிச்சை, பிற்காலத்தில் அறிவியல் பூர்வ மாக இல்லை என்று மறுக்கப்படட்டது. ஆனால் நீங்கள் காந்த சிகிச்சையினால் நோய்களை குணமாக்க முடியும் என்று கூறுகிறீர்களே! இவற்றில் எது உண்மை?*

டாக்டர் மெஸ்மர் தன்னுடைய உடலில் உள்ள சக்தியை ஒன்றுதிரட்டி அதை காந்தசக்தி என்றும், அதை தன்னுடைய கண் மூலம் செலுத்தினால் என்றும், அதை "ஹிப்னாட்டிசம்" என்றும் அழைத்தனர். சில வருடங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு புகைப்படத்தை நீங்கள் பார்த்திருக்கக் கூடும். அதாவது ஒருவரின் உடலில் மின்சாரத்தால் இயங்கும் சலவைப் பெட்டி ஒன்று இயங்கியிருப்பது போன்ற புகைப்படம், இதன் மூலம் என்ன தெரியவருகிறது என்றால், ஒருவரது உடம்பில் காந்த சக்தி இருக்கிறது என்பதை தான் பறைசாற்றுகிறது. அதே சமயத்தில் அக்குபஃஞ்சர் என்ற சிகிச்சையில் நமது உடலில் நான்கு மில்லி வோல்ட் மின்சாரம் இருப்பதை நிரூபித்திருக்கிறது. இந்த மின்சாரத்திற்கென்று ஒரு மின்னோட்ட பாதை இருக்கிறது. இந்த மின்னோட்ட பாதை சரியாக இயங்காத போது தான் நமக்கு நோய் இருப்ப தாக கண்டறிகிறோம். இந்தத் தடையை அகற்றி விட்டாலே நோய் பூரணமாக குணமடைகிறது. எனவே உடலில் மட்டுமல்ல எங்கு மின்சக்தி இருக்கிறதோ அங்கு காந்த சக்தி இருக்கும் என்பது அறிவியல் ஒப்புக்கொண்டிருக்கும் உண்மை, ஆகையால் நமது உடலில் மின்சக்தி இருக்கிறது எனும் போத அங்கு காந்தசக்தியும் இருப்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

*◆ ஏன் இந்த சிகிச்சை முறையை அனைவராலும் பின்பற்ற முடியவில்லை?*

உலகத்தில் எண்பதுக்கும் மேற்பட்ட சிகிச்சை முறைகள் உள்ளன. ஆங்கில மருத்துவம் தன்னை அதிகளவில் விளம்பரம் செய்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டதோடு மட்டுமல்லாமல் மற்ற சிகிச்சை முறைகளிலிருந்து மக்களை தன் பக்கம் திசை திருப்பியது என்று தான் சொல்ல வேண்டும். நான்காயிரம் வருடத்திற்கு முன் தற்போதுள்ள நோய்களை விட மிக கொடூர மான நோய்களை, அறுவை சிகிச்சையில்லாமல் ஆயுர்வேத முறைப்படி சிகிச்சையளித்து குணப்படுத்தியிருக்கிறார்கள். ''அக்கரைக்கு இக் கரை பச்சை'' என்ற மனிதர்களின் மன நிலையை ஆங்கில மருத்துவம் தனக்காக சரியாக பயன்படுத்திக் கொண்டது. ஆனால் மீண்டும் பழைய மருத்துவ முறைகள் மீது மக்களின் கவனம் திரும்புகிறது என்று தான் சொல்லவேண்டும். ஏனெனில் அமெரிக்காவில் ஏறக்குறைய நாற்பது சதவீதத்தினருக்கும் மேல் ஆங்கில மருத்துவம் அல்லாத வேறு ஒரு மருத்துவ சிகிச்சையை பின்பற்றத் தொடங்கிவிட்டார்கள். உலகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து தங்கி சிகிச்சை பெறும் புட்டபர்த்தி மருத்துவமனையில், கடந்த ஆறு ஆண்டுகாலமாக காந்த சிகிச்சை முறையிலும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

*◆ இந்த சிகிச்சை முறையை எந்த வயதிலிருந்து மேற்கொள்ளலாம் மற்றும் காந்தங்களின் சக்தி என்ன?*

மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு வழங்கத் தொடங்கலாம். காந்தங்களுக்கு இடையில் வைக்கப்படும் தண்ணீரில் இருக்கும் ஹைட்ரஜன் மற்றும் ஒக்சிஜன் அணுக்கள் சிதைக்கப்பட்டு அவைகள் மெல்லிய, அடர்த்தி குறைவான காந்த நீராக மாற்றப்படுகிறது.

இதை காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் மூன்று வேளையாக , ஒரு குறிப்பிட்ட அளவு. அருந்தும்போது உடலில் உள்ள வேண்டாத கழிவுகளை , சுத்திகரித்து, மலமாக வெளியேற்றுகிறது. அதைவிட நமது நோய்க் கான முதற்காரணம், மாசடைந்த சுற்றுப்புறச் சூழல். சுத்திகரிக்கப்படாத குடிநீர், இரசாயனங் கலந்த உணவு. எனவே இதனால் உருவாகும் புதிய புதிய பெயரிடப்படாத நோய்களுக்கு காந்த சக்தி மூலம், அதாவது அணுசிதைவு செய்யப் பட்ட நீரை அருந்துவதன் மூலம் நீங்கள் நோய்களை அணுகவிடாமல் தடுக்கலாம். இதைவிட வேறு ஒரு உண்மையை கூறுகிறேன் கேளுங்கள். ஒரு லீற்றர் பெற்றோலை வாங்கி, இந்த காந்தங்களை பக்கவாட்டில் வைத்து சுத்திகரிப்பதால் உங்கள் வண்டிக்கு கூடுதலாக பத்து அல்லது பதினைந்து கிலோமீற்றர் மைலேஜ் கிடைக்கும். அதன் ஆயுளும் அதிகரிக்கும். இது நிரூபிக்கப்பட்ட உண்மை.சுட வைத்து ஆறின பாலை காந்தங்களின் மேல் சில நிமிடங்கள் வைத்துவிட்டு அருந்துவதன் மூலம் உங்களுக்கு கிடைக்கும் சக்தியின் அளவு அதிகம். அதேபோல் காந்தத்தின் மீது நாற்பது மணிநேரம்தேங்காய் எண்ணெயை வைத்து, அதன்பின். அதை தலையில் தடவி வந்தால் முடி உதிர்வது நின்றுவிடும். பயன்படுத்தும் எந்த உணவுப்பொருளையும் காந்தங்களின் மீது வைத்தபின் உபயோகப்படுத்தினால் அதன் இயக்கமும், சக்தியும் கூடுதலாகும். ஒவ்வொரு பொருளின் அடர்த்திக்கேற்ப காந்தத்தின் மீது வைத்திருக்கும் நேரத்தின் அளவு இருக்கும். குறிப்பாக பெற்றோலுக்கு ஐந்து மணி நேரம், தண்ணீருக்கு எட்டு மணிநேரம், தேங்காய் எண்ணெய்க்கு நாற்பது மணிநேரம் என்று வரையறுத்திருக்கிறார்கள்.

*◆ இந்த சிகிச்சை , பெண்களுக்கு எப்படி உதவி புரியும்?*

நமது உடம்பில் ஏற்படும் நோய்களுக்கு சுரப்பிகளின் முறை தவறிய நடவடிக்கைகளே காரணம். பொதுவாக பெண்கள் தங்களின் அழகு மீது அதிகமாக கவனம் செலுத்துவார்கள். முடி உதிர்வது, முகஅழகு ஆகிய பிரச்சினை களுக்கு காந்த நீரே போதுமானது.பிறப்புறுப்பு மற்றும்



மார்பகங்களில் தோன்றும் புற்றுநோய்களுக்கு நாங்கள் தயாரித்து வழங்கும் காந்தத்தாலான மார்புக்கச்சை பட்டையை உபயோகப்படுத்தினால் பலன் உறுதி.

அதன் விலை மிக குறைவு. இதனை உறங்கச் செல்லும் முன் மூன்று மணிநேரம் வைத்துக் கொண்டு உறங்கினால் போதும், இதே காந்தத்தை தென் துருவத்தில் வைத்தால் மார்பக வளர்சசி சிறிது கூடும். மாதவிடாய் காலங்களில் தாங்கமுடியாதவலி இருந்தால், காந்தத்தை வயிறு மேல் வைத்தால் வலியும் குறையும். இரத்தப் போக்கும் நிற்கும்.கருப்பை வளர்ச்சியின்மை போன்ற பிரச்சினையிருந்தால், அவர்கள் காந்தத்தை தென் துருவத்தில் வைத்துக் கொண்டால் பலன் கிடைக்கும்.

மன அழுத்தம், தூக்கமின்மை ,காக்காய் வலிப்பு உள்ளிட்ட மூளை சார்ந்த நோய்களுக்கு தீர்வுகாண,அதற்குரிய காந்தப் பட்டையையும் தயாரித்து வழங்குகிறோம். இதனை நெற்றிப் பகுதியில் கட்டிவிட்டு இரண்டு மணிநேரம் இருந்தால் போதும். மன அழுத்தம் மறையும்.

அதேபோல் கண், காது,மூக்கு போன்ற பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் அதற்குரிய முறையில் காந்தங்களை தயாரித்திருக்கிறோம். இதனை பயன்படுத்துவதன் மூலம் நல்ல பலனைக் காணலாம். உடலில் புளிப்புத் தன்மை அதிகமானால் தான் பேன், பொடுகு வரும். தோல் நோய்களுக்கு காந்த நீரை பயன்படுத்துவதன் மூலமே குணம் காணலாம்.

காந்தம் வாங்க விரும்புவோர்கள் எங்களின் முகவரிக்கு தொடர்புகொண்டால் கிடைக்கும். மேலும் இது தொடர்பாக புத்தகமும் வெளியிட்டிருக்கிறோம்.காந்த சிகிச்சை,வண்ண மருத்துவம், எனர்ஜி ட்ரீட்மெண்ட் உள்ளிட்ட எட்டு வகையான சிகிச்சைகளையும் அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

# துறைமுகத்தை பாதுகாப்பதில் கடற்படை தளபதி பெரிதும் அக்கறை கொள்ளாமையே கப்பல் தாக்குதலுக்குக் காரணம்

## “சண்டேலீடர்” ஆங்கில வார ஏடு தெரிவிப்பு

இலங்கை கடற்படைத்தளபதி தனது தனிப்பட்ட நலன்களுக்காக மேற்கொண்ட நடவடிக்கைகளே திருகோணமலை துறைமுகத்தில் ‘‘இன்வின்சிபிள்’’ விநியோகக் கப்பல் மூழ்கிப் போவதற்கு காரணம் என்று ‘‘சண்டேலீடர்’’ ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்த ஏட்டில் வெளிவந்த முக்கிய பகுதிகள் வருமாறு,

நீருக்கு அடியில் கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் சோனார் கருவிகளை (SLPA Sonar System) துறைமுக அதிகார சபை கொள்வனவு செய்த போதும் அது நிறுவப்படாது தற்போதும் பெட்டியில் தான் உறங்கிக் கிடக்கின்றது.

இந்நிலையில் கடற்படை எம்வி ‘‘இன்வின்சிபிள்’’ என்ற விநியோகக் கப்பலை இழந்துள்ளது.

### கண்காணிப்புக் கருவி

எக்ஸ்-ரைப் (X-Type diver detection sonar System) எனப்படும் நீருக்கு அடியில் கண்காணிப்புகளை மேற்கொள்ளும் சோனார் சாதனம் 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்பாடுகளைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது.

இந்த சாதனம் மே 6 ஆம் நாள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

எனினும் அதனை விநியோகம் செய்த பிரித்தானியாவைச் சேர்ந்த ஒசின்ஸ்கான் (Oceanscan,(Pvt)Ltd) நிறுவனம் அதனை நிறுவும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

ஸ்கொட்லாந்தில் உள்ள அபடீனைச் சேர்ந்த அந்த நிறுவனத்தை எமது நிறுவனம் தொடர்பு கொண்ட போதும் அவர்கள் உள்ளூர் முகவரிடம் எமது கருத்துகளைத் தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருவியானது 157 000 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ்கள் கொடுத்து வாடகைக்குப் பெறப்பட்டதாக உள்ளூர் முகவர் சிரான் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

எனினும் அது ஏன் நிறுவப்படவில்லை என்பது தொடர்பாக கருத்துக்களைக் கூற அவர் மறுத்துவிட்டார்.

### கருவியை நிறுவ கடற்படை தடை

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு இந்த கருவிகளை கொழும்பு துறைமுகத்தில் நிறுவுவதற்கு கடற்படையினர் தடை விதித்திருந்ததாக தனது பெயரை குறிப்பிட விரும்பாத துறைமுக அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீருக்கு அடியிலான பாதுகாப்புக் கருவிகளை பொருத்துவதற்கு பாதுகாப்புக் காரணங்களை முன்னிறுத்தி தடை விதித்த பெருமை இலங்கை கடற்படையையே சாரும் உலகில் வேறு எந்த கடற்படையும் இவ்வாறு செய்ததில்லை.



கடற்படையினரின் இந்த தடையை எதிர்த்து துறைமுக காவல்துறையினரிடம் முறைப்பாடுகள் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

### வேறு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்ய அதிகார சபை மீது அழுத்தம்

இதனிடையே, வேறு ஒரு நிறுவனத்திடமிருந்து இந்த கருவிகளை கொள்வனவு செய்வதற்காக அழுத்தங்களை கடற்படையினரும் பாதுகாப்பு அமைச்சும் துறைமுக அதிகாரசபை மீது பிரயோகித்திருந்ததாகவும் அதனை துறைமுக அதிகாரசபை ஏற்க மறுத்ததனால் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ள கருவிகளை நிறுவுதற்கு கடற்படை தடை விதித்துள்ளதாகவும் துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த மற்றுமொரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் விநியோகக் கப்பல் மூழ்கிய பின்னரும் கடற்படையினர் இந்தத் தடைகளை தளர்த்தவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எக்ஸ்- ரைப் கருவிகளுடன் பிரித்தானியாவின் மற்றுமொரு நிறுவனமான கியூ நெற்றிக் (Qinetiq System) நிறுவனத்தின் சோனார் கருவிகளும் முன்னர் பரிசீலிக்கப்பட்ட போதும் அவை உகந்தது அல்ல என்று தொழில்நுட்ப ஆய்வுக்குழு நிராகரித்திருந்தது.

இந்தக் கருவியானது துறைமுகத்திற்கு வெளியில் செயற்திறன் அற்றதாகக் காணப்பட்டதே அதற்கான காரணம்.

எனினும் கடற்படையினர் அதனையே மீண்டும் பிரிந்துரை செய்திருந்தனர். இதனைக் கொள்வனவு செய்வதற்கான பரிந்துரைகளை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் மேற்கொண்டிருந்தார்.

### தனிப்பட்ட நலனில் அக்கறை

கடற்படைத் தளபதி துறைமுகத்தை பாதுகாப்பதில் பெரிதாக அக்கறை காட்டவில்லை . தனது தனிப்பட்ட நலனில் தான் அதிகம் அக்கறை காட்டியுள்ளார். அதனையே மே 10 ஆம் நாள் நடைபெற்ற தாக்குதல் எடுத்துக் காட்டியுள்ளது.

இந்த கருவிகளை கொள்வனவு செய்வதற்கு 3 வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட இழுபறிகளுக்கு இடையில் விடுதலைப்புலிகள் காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களை தாக்கியுள்ளதுடன் கொழும்பு துறைமுகத்தையும் தாக்குவதற்கு முயற்சித்துள்ளார்.

1995ஆம் ஆண்டு ஏப்பிரல் 19ஆம் நாள் நீருக்கு அடியில் நடத்தப்பட்ட தாக்குதலில் கடற்படையினர் இரு போர்க் கப்பல்களை திருகோணமலை துறைமுகத்தில் இழந்திருந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் நடைபெற்று 13 வருடங்கள் கடந்த நிலையிலும் கடற்படையினர் நீருக்கு அடியிலான பாதுகாப்பு பொறிமுறைகள் தொடர்பாக போதுமான பாதுகாப்புக்களை கொண்டிருக்கவில்லை.

கியூநெற்றிக் சோனார் தொகுதியை கொள்வனவு செய்வதற்கான அழுத்தத்தை கடற்படைத் தளபதி ராஜபக்ஷ சகோதரர்களிடமும் மேற்கொண்டிருந்தார்.

மஹிந்தவின் புதல்வர் ஜோசித ராஜபக்ஷ பிரித்தானியா கடற்படைக் கப்பலில் பயிற்சி பெறுவதனால் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகத்திற்கு நெருக்கான நிறுவனத்திடம் கொள்வனவு செய்வது நல்லது என்ற கருத்தையும் அவர் முன்வைத்திருந்தார்.

தற்போது துறைமுக அதிகார சபையின் எதிர்ப்பையும் மீறி கியூநெற்றிக் நிறுவனத்திடமிருந்து சோனார் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# மண் மீட்கும் போர் போன்று மொழி மீட்கும் போரிலும் வெல்வோம்

-தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் உரை

(கொழும்பு)

மண் மீட்கும் போர் போன்று மொழி மீட்கும் போரிலும் வெல்வொம் என்று தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளையில் கடந்த சனிக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார வழி வானொலியான புலிகளின் குரல் நடத்திய முத்தமிழ் மன்றத்தின் தமிழ் விழாவில் தமிழ் எங்கள் உயிர் எனும் தலைப்பில் வெ. இளங்குமரன் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது முன்னோர்கள் உருவாக்கிய மொழியை நாம் இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். தமிழ் மொழியானது 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு வளமான மொழியாக இருந்தது என்பதனை சங்க இலக்கியங்களின் சொற்களஞ்சியங்களை எடுத்து பார்த்தால் தெரியும்.

எமக்கு வியப்பாக இருக்கும் தொன்மையான மொழிகள் எல்லாம் வழக்கிழந்து போன நிலையில் இரண்டு மொழிகள் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

அதில் சீனம் என்பது உலகில் உள்ள மக்கள் தொகையிலும் பெரும் தொகையான மக்களின் தாய்மொழியாக இருந்தாலும் சீனா தொடராக ஆட்சியில் இருந்து ஆட்சி மொழியாக இருப்பதாலும் சீன மொழி வழக்கில் இருக்கின்றது.

இன்றும் தமிழ் மொழி உலகில் தலை நிமிர்ந்து இருக்கின்றது எனில் அம்மொழியின் தனிச்சிறப்பும் வளமான இனிமையான மொழியாக இருப்பதால் தான் அது நிலைத்து இருக்கின்றது.

தமிழைப் பொறுத்த மட்டில் ஏனைய மொழிகளுக்கு நிகராக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நிலையில் எமது மொழியை நாம் பேண வேண்டும். எமது மொழிக்காக நாம் உழைக்க வேண்டும். இதற்காக எமக்கென தனி நாட்டை உருவாக்க வேண்டும்.

இம் மண்ணில் எழுச்சி ஏற்படுத்தப்பட்டு இழந்த இறைமையை மீட்டெடுப்பதற்கு ஒரு போராட்டம் நடைபெறுகின்றது.

எமது விடுதலைப்போராட்டம் வீறு கொண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது மொழி, கலை, பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்கின்ற மாவீரர்களின் ஈகத்தைக் கொடுத்து மிகப் பெரிய இனத்தின் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற அமைப்பு மொழியையும் கலை பண்பாட்டையும் சேர்த்துப் பேணுகின்ற அமைப்பையும் சேர்த்து நடத்துகின்றது என்கிற வகையில் மண்ணில் புதுமையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

மொழி காக்கப்படவேண்டும். இன அடையாளங்கள், கலைப் பண்பாடு பேணப்பட வேண்டும். எமது முன்னோர்கள் காட்டிச்சென்ற வழியில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். அந்த வகையில் தமிழினம் மீது ஏற்படுத்தப்படும் அழுத்தங்கள் தாக்கங்களை எல்லாம் நீக்கி இம் மண்ணில் தமிழ் மக்கள் முழு விடுதலையைப் பெற்று உயர்வான நிலையை அடையவேண்டும் என்ற விழிப்புணர்வு இம் மண்ணில் உருவாகியுள்ளது.

இதனை எழுச்சி கொள்ள வைப்பது இம் மண்ணில் எதிர்காலத்தை தாங்கி நிற்கும் இளையவரின் கடமை. அதற்காக அனைவரும் முன்னின்று உழைக்க வேண்டும் என்றார் அவர். (அ-5)

# மூன்று வாரங்களில் தமிழகத்துக்கு 270 ஈழத் தமிழ் அகதிகள்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் உக்கிரமடைந்திருப்பதனால் கடந்த மூன்று வாரங்களில் மட்டும் தமிழகத்துக்கு 270 ஈழ அகதிகள் சென்றுள்ளனர்.

ஈழத்தமிழ் அகதிகளின் வருகை அதிகரித்திருப்பதுடன் கடந்த வெள்ளிக்கிழமை தனுஷ்கோடிக்கு 15 பேர் சென்றதாக இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, 6 சிறுவர்கள் உட்பட இராமேஸ்வரத்துக்கு அண்மித்த கடற்பரப்பில் மணல் திட்டில் 17 மணித்தியாலங்கள் தத் தளித்துக் கொண்டிருந்த 16 பேரை இந்தியக் கடற்படையினர் மீட்டு மண்டபம் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் கடல்மார்க்கமாக இந்தியாவுக்குள் நுழைவதற்கு முயற்சிப்பதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து கரையோரப் பாதுகாப்பை இந்தியக் கடற்படையினரும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் பலப்படுத்தியிருப்பதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இந்திய விமானப்படையினரும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் கடற்படையினர் தமது செயற்பாடுகளை தீவிரப்படுத்தியிருப்பதுடன் எந்த நேரமும் அவர்கள் விழிப்பாக வைக்கப்பட்டிருப்பதாக இந்தியச் செய்திகள் கூறுகின்றன.

இது இவ்விதமிருக்க இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்தும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதாக தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-5)

நாவாந்துறைப் படிப்பகம்



மனம் சாந்தமாயும் சமாதானமாயும் இருக்கவேண்டுமானால், அதை அறிவுள்ள உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு நிரப்ப வேண்டும். –ஆவ்பரி

வலம்புரி

## மதச்சடங்குகளுக்கு ஏற்ப மனித மனங்கள் மாறவில்லை

இலங்கைத் திருநாட்டில் மதச்சடங்குகளுக்கும், திருவிழாக்கள், பண்டிகைகளுக்கும் குறைவேயில்லை.

சமயாசார நிகழ்வுகள் மனிதனைப் பண்படுத்துவதற்காகவே முன்மொழியப்பட்டன.

சமயம் என்பது 'சமைத்தல்' என்ற வினையடியிலிருந்து தோற்றம் பெற்றதாகும். சமைத்தல் என்பது உண்ணுவதற்கேற்றவாறு உணவுப் பண்டத்தை பண்படுத்துவதாகும். அதேபோல் சமயம் என்பது மனிதர்களை வாழ்வதற்குரியவர்களாக பண்படுத்துவதாகும். இதன் பொருட்டே ஆலயங்களும் அங்கு இடம்பெறும் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள், பண்டிகைகள் என்பன அனுஷ்டிக்கப்படுகின்றன.

எனினும் இலங்கையில் சமய நிகழ்வுகள், சம்பிரதாயமானவையாக இருக்கின்றனவே தவிர, அவை மனிதர்களை பண்படுத்தியதாக இல்லை.

மனிதர்களைப் புனிதர்களாக்காத விழாக்களாலும், சமயச் சடங்குகளாலும் எந்தப் பயனும் இல்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

குறிப்பாக பௌத்த மதத்தை பின்பற்றும் சிங்கள மக்கள், இலங்கை பௌத்த நாடு என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள்.

ஆனால் அவர்கள் இறுக்கமான மதவாதிகளாக இருக்கின்றார்களே தவிர, பௌத்தபிரானின் போதனைகளை பின்பற்றுவதில் கரிசனை காட்டுவதாக இல்லை.

நேற்றைய தினம் வெசாக் பண்டிகையாகும். கௌதம புத்தபிரான் முத்தியடைந்த தினமே வெசாக் பண்டிகையாக கொண்டாடப்படுகின்றது.

எங்கும் வெளிச்சக் கூடுகளை ஏற்றி, நாடும் மக்களும் ஜெகஜோதியான வாழ்வை வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையிலேயே வெளிச்சக் கூடுகள் ஏற்றப்படுகின்றன.

ஆனால் நாட்டு மக்கள் அனைவரும் ஜெகஜோதியான வாழ்வை வாழவேண்டுமென பௌத்த சிங்கள மக்களோ அன்றி பௌத்த துறவிகளோ, ஆட்சியாளர்களோ ஒருபோதும் எண்ணியது கிடையாது.

அத்தகையதோர் எண்ணம் இருந்திருந்தால் தமிழ் மக்கள் இத்துணை துன்ப துயரங்களை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது.

கௌதம புத்தபிரானின் போதனைகளும், கொள்கைகளும் இன்று வெறும் கொண்டாட்டங்களாகவுள்ளனவே தவிர அவை மனித மனங்களைத் தூய்மைப் படுத்த தவறிவிட்டன என்பதே உண்மை.

# பொலிஸ் அதிகாரம் கிழக்குக்கு மாத்திரமல்ல ஏனைய மாகாணங்களுக்கும் வழங்க வேண்டும்

## முதலமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிழக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமாயின் ஏனைய மாகாண சபைகளுக்கும் அந்த அதிகாரம் பகிரப் பட வேண்டுமென ஏனைய மாகாண முதலமைச்சர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமாயின்ஏனைய மாகாண சபைகளுக்கும் அந்த அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென வட மத்திய மாகாண முதல் அமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திஸ்ஸாநாயக்கா தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண சபைக்கு மாத்திரம் இந்த அதிகாரம் வழங்கப்படாது. அவ்வாறு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுமாயின் அது அனைத்து மாகாண சபைகளுக்குமே வழங்கப்படும் என்பது தெளிவு என அவர் கூறியுள்ளார்.

பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென பல்வேறு தடவைகள் முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தி இருந்ததாக ஊவா மாகாண சபை முதலமைச்சர் விஜித் விஜயமுனி.டி.சொய்சா தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக முதலமைச்சர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து இதற்கு முன்னர் பேச்சுவார்த்தை நடத்தி இருப்பதாகவும்அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் தரப்பிலேயே தற்பொழுது பந்து உள்ளது. எனவே அவரே இது குறித்து முடிவெடுக்க வேண்டுமென அவர் தெரிவித்தார். இதேவேளை நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை கூடும் மாகாண சபை முதலமைச்சர்கள் மாநாடு எதிர்வரும்29 ஆம், 30ஆம் திகதிக ளில் பெல்வெஹரவில் கூடவுள்ளதுடன் அதில் இந்த விடயம் கூறித்து ஆராயப்படு மென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாநாட் டில் கிழக்குமாகாண முதலமைச்சர் செல்வ துரை சந்திரகாந்தன் கலந்து கொள்வார் என தெரிவித்திருக்கும் முதலமைச்சர்கள் ஒன்றியத்தின் தலைவர் தென்மாகாண சபை முதலமைச்சர் ஷான் விஜயலால் டி.சில்வா இதற்கான அழைப்பு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

13வது திருத்தச் சட்ட மூலத்துக்கு அமைய கிழக்கு மாகாண சபைக்குப் பொலிஸ் அதிகாரங்கள் பகிரப்படும் என சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன முன்னர் கூறியிருந்தார். (அ–5)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கான பொது மன்னிப்புக்காலம் நீடிக்கப்பட்டது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் இணைவதற்கு வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்புக் காலத்தை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்க இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்த காலக்கெடுவை மேலும்இரண்டு வாரங்களுக்கு நீடித்திருக்கும இராணுவத்தினர் இந்தக் காலப்பகுதியில் இது வரை 4ஆயிரம் இராணு வத்தினர் மீண்டும் இணைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மே மாதம் 2 ஆம் திகதி முதலான பொது மன்னிப்புக் காலப் பகுதியில் 3,709 இராணு வத்தினர் மீண்டும் இணைந்து கொண்டுள்ளனர். 16 ஆம் திகதியுடன் முடிவடைந்த பொது மன்னிப்புக் காலப்பகுதி மீண்டும்இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக் கார கூறியுள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி வரை இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் இணைந்து கொள்வதற்கான பொது மன்னிப்புக் காலத்தை நீடிப்பதற்கு இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது. இராணுவத்திலிருந்து தப்பி யோடியவர்களில் பெரும் எண்ணிக் கையிலானவர்கள் மீண்டும் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதுடன் பொதுமன்னிப்பு காலத்தை மேலும் நீடிக்குமாறு பல்வேறு தரப்புக்களிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்தே பொது மன்னிப்புக் காலத்தை நீடிக்கத் தீர்மானித்தோம் என்றார் அவர்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் கடந்த சனிக்கிழமை முதல் மூன்று நாட்களுக்குள் தமது பிரிவுகளுக்குத் திரும்பிக்கொள்ள இராணுவம் பொது மன்னிப்பு வழங்கியிருந்தது. இராணுவத்திலிருந்து தப்பியோடியிருக்கும் 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை மீண்டும் இணைத்து வடக்கை நோக்கி முழு அளவிலான மோதலொன்றை முன்னெடுக்கும் நோக்கிலேயே இராணுவம் பொது மன்னிப்பு வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் பின்னர் இராணுவ த்திலிருந்து தப்பியோடியவர்கள் இந்த பொது மன்னிப்புக் காலத்தில் மீண்டும் இணைந்து கொள்ளலாமெனத் தெரிவித்திருக்கும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார பொது மன்னிப்பு க் காலத்தின் முடிவுத் திகதி மீண்டும்ஒரு முறை நீடிக்கப் படாது எனக் கூறியுள்ளார்.

15 ஆயிரம்பேர் இராணுவத்தி லிருந்து தப்பிச் சென்றிருப்பதாகத் தகவல்கள் கூறுவதுடன் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வழங்கப்பட்ட பொது மன்னிப் புக்காலப்பகுதியில் 4 ஆயிரம் இராணுவத்தினர் சரணடைந்ததாகத் தெரியவருகிறது.

(அ–5)

# கிழக்கு மாகாண சபையில் ஜே.வி.பி.தனித்தியங்கும்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு உறுப்பினர் விமல்பிய திஸ்ஸ, தான் மாகாண சபையில் இருந்து கொண்டு யாருடனும் இணையாமல் தனியாக இனவேறு பாடுகளுக்கு எதிராக போராடப்போவதாக தெரிவித்துள்ளார்.

தானும் தனது கட்சியும் எப்பொழுதும் மக்களின் பக்கம் இருந்து இன வேறு பாடுகளுக்கு எதிராகப் போராட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மாகாண சபை நிர்வாகம் இனவேறு பாடு கொண்ட குழுவிடம் சென்றுள்ளது. இதன் பிடியில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டி இத் தீர்மானம் எடுக்கப் பட்டதாக அவர் கூறினார்.

'நாங்கள் இவ் இன வேறுபாடு கொண்ட குழுவைத் தோற்கடிக்க கடுமையாக முயற்சிப்போம் என்றார்' ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து ஒருவரும் என்னை அணுகி ஆதரவு கேட்கவுமில்லை அவர்களுக்கு அந்தத் தேவை இருக்கவுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ–5)

## பாம்புக்கடிக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இலக்கான நிலையில் இருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் செட்டியார் வளவை சேர்ந்த எஸ். ராசையா என்பவரும், அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த எ.ரேகா (வயது 23) என்பவருமே பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்கள், அவர்களின் வீட்டு வளவுகளில் வைத்தே பாம்புக்கடிக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது. (ச–3,4)

## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திர சிகிச்சையும் கருத்தடை ஊசி ஏற்றலும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பிரதான வீதி, யூபிலி மகப்பேற்று நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையும், எட்டு மாதத்திற்கு மேற்பட்ட பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை ஊசி ஏற்றலும் நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (அ–7)

ஓலைச் சுவடிகள் 31

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### மன்னிப்பவருக்கு நீண்ட ஆயுள் கிடைக்கும் என்பது எவ்வாறு உண்மையாகும்?

மன்னிப்பவருக்கு நீண்ட ஆயுள் கிடைக்குமா என்பது ஒரு விசித்திரமான கேள்வி என்று முதற் பார்வையில் நமக்கு தோன்றலாம். "மன்னிப்பவருக்கு எப்படி ஆயுள் நீடிக்கும்? மன்னிக்கப்பட்டவருக்கு ஆயுள் நீடிக்கும் என்பதில் அர்த்த மிருக்கின்றது" என்றெல்லாம் கேட்டாலும் கேட்கலாம். மேலும் மன்னிக்கும் போது நம் கோபமும் ரோசமும் மனதுக்குள் அடக்கி வைப்பதனால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும் என்பதல்லவா நிஜ விளைவு என்றும் நாம் எண்ணுவதிலும் விஷயமிருக்கின்றது.

நமக்குள்ளிருக்கும் உணர்ச்சிகளை வெளியேற்றிவிடுவோமானால், விறைப்பிலிருந்து விடுபட்டு உடலுக்கும் மனதுக்கும் நிம்மதி பிறக்கும் என்று நாம் அறிந்ததுண்டு. ஆனால், மன்னிக்கின்றவன் உணர்ச்சிகளை மனதுக்குள்ளேயே ஒதுக்கி வைத்திருந்தும் நீடித்த ஆயுளை பெறுவான் என்பதிலும் சாஸ்திர அடிக்கடை இருப்பதாக நாம் உணர்வதில்லை.

பாவம் மனிதத் தன்மைக்குரியதும், மன்னிப்பு இறைவனுக்குரியதும் என்பது மதபோதனைகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் மன்னிப்பும் நீடித்த ஆயுளும் எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதை அமெரிக்காவில் மிக்சிகன் பல்கலைக்கழக விஞ்ஞானி டாக்டர் லாரன் எல் டாசன்ட் என்பவர் கண்டுபிடித்துள்ளார். ஒருவருக்கு மன்னிப்பளித்ததும் அவரிடம் கருணை காட்டியதாக உணரும் நற்சிந்தனை மன்னிப்பவருக்குள் உருவாகின்றதனால் அவர் மகிழ்வுறுகின்றார். ஆனால் தண்டனை அளிக்கும் போது குற்ற உணர்ச்சி அவரை துரத்தி வருவதும் மன நிம்மதியை அழிப்பதுமே விளைவுகள். மகிழ்வுற்ற மனதுடையவனுக்கு நீடித்த ஆயுள் உண்டாகும் என்பதையே டாக்கடர் லாரன் எல். டாசன்ட் தன் கண்டுபிடிப்புக்களின் சாரமாக வெளியிட்டுள்ளார்.

# வடக்கில் இடைக்கால சபையின் மூலம் வளங்களைச் சுரண்ட இந்தியா முயற்சி

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கில் வளங்களைச் சூறையாடுவதற்குப் பிள்ளையானை முதலமைச்சராக்கியுள்ள இந்தியா, வடக்கில் வளங்களைச் சூறையாட இடைக்கால நிர்வாக சபையினை நிறுவுவதற்கு முயற்சித்து வருகின்றது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குற்றஞ்சாட்டினார்.

இந்தியாவின் அடிமைத்தனமான அரசாங்கமாக இலங்கை அரசு மாறியுள்ளது. எனவே இனியும் பொறுமை காக்க முடியாது. தேசப்பற்றுள்ள புதிய அரசாங்கத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் ரில்வின் சில்வா மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இன்று இந்தியாவின் அடிமைத்தனமான அரசாங்கமாக மாறியுள்ளது. எனவே தான் எமது படையினர் மீட்டெடுத்த கிழக்கு மாகாணத்தில் அம் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துப் படிப்படியாக ஜனநாயகத்திற்குள் அவர்களைக் கொண்டு வராது திடீரென இந்தியாவின் தேவைக்கு கிழக்கின் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

அத்தோடு ஜனாதிபதி, ஹிஸ்புல்லாவுக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இந்தியாவின் தேவைக்கேற்ப பிள்ளையான் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

எமது படையினரால் மீட்கப்பட்ட சம்பூர் பிரதேசத்திற்கு எவராலும் உட்புக முடியாது. அங்கு வாழ்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

மாறாக 2 ஆயிரம் ஏக்கர் காணி அனல் மின்நிலையம் அமைப்பதற்காக இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் எண்ணெய்க் குதங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இன்று அப்பிரதேசத்திலுள்ள இரும்புகள் வெட்டப்பட்டு இந்தியாவுக்கே அனுப்ப தயார் செய்யப்படுகின்றன. திருகோணமலைத் துறைமுகமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இனி கிழக்கில் முதலமைச்சர் பிள்ளையானைப் பயன்படுத்தி அனைத்து வளங்களையும் இந்தியா ஆக்கிரமித்து விடும்.

இதேபோன்று வடக்கிலும் வளங்களை ஆக்கிரமிப்பதற்காக இடைக்கால நிர்வாக சபையை நிறுவ வேண்டும் என அரசாங்கத்தின் மீது அழுத்தத்தை இந்தியா ஏற்படுத்தி வருகின்றது.

இதற்கு முன்னோடியாக அமைச்சர் ராஜித சேனாரட்னவும் கருத்துக்களை முன்வைத்தார். இலங்கையில் சீமெந்துத் தட்டுப்பாட்டை போக்குவதற்கே காங்கேசன்துறை சீமெந்துக் கம்பனியை இந்தியாவின் டாட்டா பிர்லா கம்பனிக்கு வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இவையெல்லாம் வடக்கில் வளங்களை சூறையாடும் இந்தியாவின் திட்டத்தின் ஆரம்ப கட்ட நகர்வுகளாகும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான தேவை எழுந்துள்ளது.

இதற்காக ஐ.தே.கட்சியுடன் நாம் பேசப் போவதில்லை. தற்போது புத்திஜீவிகள், கலைஞர்கள் எனப் பல்வேறு அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம்.

தற்போது தேசிய கொள்கையை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் அரசாங்கத்தின் நாட்டை பிரிக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளையும் வடக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பதற்கான முன்னெடுப்புக்களையும் தடுத்து நிறுத்துவோம்.

மக்களை ஒன்று திரட்டி பாத யாத்திரைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவோம். ஒருபோதும் இலங்கையின் வளங்களை சுரண்டுவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம் என்றார். (ச-5)

## தமிழீழத்தை ஆதரித்து இந்திய அரசு...

அது பிள்ளையான் குழுவைப் பொறுத்தது. அரசுடன் தொடர்ந்து இணைந்திருப்பதா? இல்லையா? என்பதை அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முதன்முறையாக விடுதலைப்புலிகள் வன்னியில் 4 போர் முனைகளால் முன்னேறும் அரச படையினரை எதிர்கொண்டுள்ளனர். 90 ஆயிரம் படையினரின் இந்த முற்றுகையின் முன்னால் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது.

சிறிது சிறிதாக அவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகின்றது. சண்டையிடுவதற்கு ஒருவருமே எஞ்சியிராத நிலை வெகுவிரைவில் உருவாகும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் என்ற கதைக்கே இனி இடமில்லை. இது விடயத்தில் எந்தப் புறச் சக்திகளின் கட்டளைகளுக்கும் அரசு அடிபணியாது. வெளிநாடுகள் எமக்கு நண்பர்களாக இருக்கும் வரை அவர்களின் பங்கு, பணி பாராட்டப்படும்.

எமது உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைக்கும் அருகதை அவர்களுக்குக் கிடையாது. அந்த வகையில் விடுதலைப்புலிகளுடன் எந்தவொரு அமைதி ஒப்பந்தத்தை செய்து கொள்ளவும் அரசு தயாரில்லை.

அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு அமைதிப் பேச்சுக்களில் தமக்குள்ள நேர்மையைக் காண்பித்தால் அது தொடர்பாக அரசு பரிசீலிக்கும்.

அமைதிப் பேச்சுக்கள் வெளிநாடுகளில் ஒன்றும் நடைபெறாது. உள்நாட்டுப் பிரச்சினை உள்நாட்டில்தான் பேசப்படும் என்று கூறியுள்ளார். (ச-5)

## மோ.சைக்கிள்...

(வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவருடன் பயணித்த ரி.ஜெயதாசன் (வயது-20) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ச)

## வவுனியா ...

வித்துள்ளனர்.

சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## கிழக்கு மாகாண சபை...

வதற்கு இணக்கம் தெரிவித்த ஹிஸ்புல்லா, முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான ஆட்சிக்கு ஆதரவு வழங்கவும் இணங்கியிருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண மக்களுக்கு அநீதி இழைக்கப்படாது என ஜனாதிபதி, ஹிஸ்புல்லாவிடம் உறுதிமொழி வழங்கியிருப்பதாக அந்த அமைச்சர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகப் பிள்ளையான் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனித்துச் செயற்படப் போவதாக ஹிஸ்புல்லா உட்பட மூவர் கிழக்கு மாகாண ஆளுநருக்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் தற்பொழுது அரசாங்கத்துடன் இணைவதற்கு ஹிஸ்புல்லா தயாராக இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் தனது இறுதித் தீர்மானத்தை அறிவிப்பதற்கு முன்னர் மீண்டும் ஒருதடவை ஆலோசிக்க வேண்டியிருப்பதாக ஹிஸ்புல்லா ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஹிஸ்புல்லாவைச் சந்தித்த போது அவருடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த. மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா. அமைச்சர்களான டளஸ் அழகப்பெரும மற்றும் றிசாட் பதியுதீன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ச-5)

## ரணில்...

குறித்து ஆராயவுள்ளதாகவும் இவ்வாண்டுடன் முடிபடைய இருக்கும் ஆடை ஏற்றுமதி கோட்டாவைப் புதுப்பிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கூட்டுறவுடன் செயற்படக் கூடிய...

இலங்கை இனச் சிக்கலில் அனைத்துலக பரிமாணம் எனும் நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

வடக்கு - தெற்கு வேல்ஸ் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் வேர்ஜினியா ஜட்ஜ் தலைமையில் இந் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

35ற்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கொள்கை மையங்கள், மோதல்தணிப்புநிறுவனங்கள்மற்றும்வடக்கு-தெற்கு வேல்ஸ் பல்லைக்கழக பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற பலதரப்பினரும் பங்குபற்றிய இந் நிகழ்வில் இலங்கை இனச் சிக்கலின் இன்றைய பரிமாணம் எனும் இந்த ஆவணம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த நியூ சவுத் வேல்ஸ் மாநிலங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் வேர்ஜினியா ஜட்ஜ், சர்வதேச சமூகத்தின் தலையீடு பற்றிய விடயங்களை எடுத்தியம்பி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இந்தியாவின் தலையீடு, மேற்கு - சீனா மற்றும் இந்தியத் தரப்புகளுக்கிடையிலான இலங்கை தொடர்பான பொருளாதார, அரசியல் மற்றும் கேந்திர முக்கியத்தும் சார்ந்த விவகாரங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் இந்த புவிசார் அரசியல் நோக்கிற்கு மாறான ஜனநாயக மீட்பு மனித உரிமைகள் மற்றும் தாராளவாத சமாதானம் எனும் கோணத்தில் முன்வைக்கப்படும் பார்வையும் பதிவாகியுள்ளது என்பதனைச் சுட்டிக்காட்டினார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய அனைத்துலக ஜூரிமார் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் மாநில சட்டமா அதிபருமான நீதியரசர் ஜோன் டவுட், சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்குப் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

இலங்கைக்கு இரு அரசுகள் எனும் தேவையுள்ளது என்பதனையும் அந்த இரு அரசுகளும் கூட்டுறவுடன் வாழ்வதற்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும் என்பதையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பங்கேற்ற அனைவரிற்கும் ஆவணம் வழங்கப்பட்டதுடன் நீதியான சமாதானம் மற்றும் ஜனநாயகத்திற்கான மையத்தின் செயற்பாடுகள், நிதித் தேவைகள் தொடர்பான அறிமுகம் செய்யப்பட்டது.

இலங்கை இனச் சிக்கலானது வெறுமனே தமிழ்-சிங்கள முரண்பாடு என்பதனைத் தாண்டி அதனில் சர்வதேச தரப்புக்கள் வகிக்கும் பாத்திரம் தொடர்பான விவாதம் இனச் சிக்கலைப் புரிவதற்கும் அதனைத் தணிப்பதற்கும் நீதியான சமாதானத் தீர்வைத் தமிழ் மக்கள் பெறுவதற்கும் முக்கியமானது என்கின்ற நோக்குடன் இந்த ஆவணம் சி.ஜே.பி.டி. அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-5)

## NOTIFICATION

ST.JOHN'S COLLEGE
JAFFNA
OLD BOYS' ASSOCIATION
ANNUAL GENERAL MEETING

The 92nd Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday the 07th of June 2008 at 9.00 a.m. in the College Auditorium.

Members who wish to submit resolutions are kindly requested to do so in Writing on or before 30th of May 2008.

The programme for the day would be published in due course.

No individual Invitations would be sent

Breakfast (Rs.100/-), Lunch (Rs.250/-).

Tickets are available from the Treasure Mr.T.Nanthakumaran at the college till 06th of June 2008.

**V.Sanjeev**
Secreraty

(C-1152)

மைகொம்யூட்டர் கணினி சஞ்சிகை
உங்கள் அபிமான MyComputer கணினி சஞ்சிகையின் 7வது இதழ் சகல இடங்களிலும் கிடைக்கும்
வெளியீடு Speed IT Net 0214591871

நீங்களும் கணனி பட்டதாரியாகலாம்
O/L / A/L தடையல்ல
இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது
யாழிலேயே கற்கும் வசதி
பகுதிநேர வெளிவாரி கற்கைநெறி
16.05.2007 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த பட்டமளிப்பு வைபவத்தின் போது சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
24-05-2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

Microsoft Certified Systems Engineer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.05.2008 08.00 a.m.
மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

யாழ் மக்களுக்கு இனிப்பான செய்தி
புதிய சேவைகளை அறிமுகப்படுத்தி வரும் SPEED IT net நிறுவனம் தற்போது மேலும் ஒரு சேவையினை அறிமுகப்படுத்தியிருக்கிறது
விளம்பரம்.நெற் (24 மணிநேர இன்ரநெற் விளம்பர சேவை)
www.Vilamparam.net
உங்கள் வீட்டில் நடைபெறும் வைபவங்கள் மற்றும் துயர்பகிர்வுகள் பாராட்டுக்கள் மணமக்கள் தேடுதல் விழாக்கள் அழைப்பிதழ்கள் அறிவித்தல்கள் சம்பந்தமான சகலவிதமான விளம்பரங்களையும் இணையத்தளம் ஊடாக பிரசுரிக்கும் சேவையே இதுவாகும். குறைந்த செலவில் உலகமங்கும் இன்ரநெற் ஊடாக தெரியப்படுத்த இன்றே எம்மை நாடுங்கள்
Speed IT net 72/28 பணிக்கர் லேன் திருநெல்வேலி சந்தி அருகாமை பலாலி வீதி திருநெல்வேலி யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0214 591871 / 0777 563213 /0602010832
மின்னஞ்சல் : email@vilamparam.net

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.